பிரிவினை வாரம்

21] ஆண்டு சந்தா ரூ. 8 (23—9—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 4

நமது கொள்கை உலகெங்கணும் எட்டியுள்ள நேரம் இது.

நமது இலட்சியம் தூய்மையானது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

பண்டித நேரு அவர்கள் இலண்டனுக்குப் போய்ச் சேர்ந்ததும், நிருபர்கள் கேட்ட கேள்வி,

"திராவிடநாடு பிரிவினை பற்றி உங்கள் கருத் தென்ன"

என்பதாகும். அதற்கு அவர் அளித்த பதில், அவருடைய நிலையை மிகமிகக் குறைத்துவிட்டதென்ற போதிலும், அவராலும் உண்மையை மறைத்துப் பேச முடியவில்லை.

"திராவிடப் பிரிவினை கோருவது முட்டாள் தனம். ஆனால், அவர்கள் எப்படியோ மக்களிடம் ஓட்டு வாங்கிவிடுகிறார்கள்.

என்று, கேள்விகேட்ட நிருபர்களுக்கு பதில் அளித் துள்ளார்.

நாட்டுப் பிரிவினை கேட்பது முட்டாள்தனம். மக்க ளிடம் ஓட்டு வாங்குவது புத்திசாலித்தனம்.

எப்படியிருக்கிறது பண்டிதரின் வாதம்?

முட்டாள்தனமான கொள்கையை வைத்துக் கொண்டுள்ளவர்களை மக்கள் எப்படி ஆதரிக்கிறார்கள் —ஓட்டுப் போடுகிறார்கள் என்று அந்த நிருபர்கள் திருப்பிக் கேட்டார்களோ இல்லையோ, அதுபற்றிய விபரம் ஒன்றும் செய்தித் தாள்களில் வரவில்லை.

என்றபோதிலும், மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறார்கள். அதன் இலட்சியத்தை ஒப்புக்கொள்கிறார்கள். அதற்கு ஓட்டுப் போடுகிறார்கள் என்பதை மட்டும் பண்டித நேரு அவர்களால் மறுக்கவோ மறைக்கவோ முடியவில்லை.

பண்டித நேரு அவர்கள் இலண்டன் போனாலும், பாரிஸ் போனாலும், வாஷிங்டன் போனாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தை — அதன் இலட்சியத்தை— அசைக்கவோ, மறுக்கவோ முடியாத கொள்கைப் பிடிப்பை அவரால் மறைக்கமுடியவில்லை.

திராவிட முன்னேற்றத்தின் வளர்ச்சியையும், பொதுமக்கள் அதற்குத் தரும் ஆதரவையும் காணும் பண்டித நேரு அவர்களுக்குத் தம்முடைய (காங்கிர சின்) எதிர்காலம் இருண்டுவிடுமோ என்ற கிலி ஏற் பட்டுவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் அலட்சியப்படுத்தப் படவேண்டிய ஒன்று—அதற்கு மக்களிடம் செல்வாக் கேதும் கிடையாதென்று தமிழக அமைச்சர் குழுவினர் தம்மிடம் கூறியதெல்லாம் வெறும் கண்துடைப்பென் பதை அவர் உணரத் தலைப்பட்டுவிட்டார்.

எனவே, அவர் எங்கு சென்றாலும், எங்கு பார்த் தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் அவர் கண்களிற் படுகிறது—காதுகளில் கேட்கிறது. மறைக்க முடிய வில்லை—மறக்கவும் முடியவில்லை.

அந்த அளவுக்கு நாம் வளர்ந்துவிட்டோம்.

எனவே, நம்முடைய பணியில் பொறுப்பும், இலட்சி யத்தில் கடமையுணர்ச்சியும் நன்கு மிளிர்தல் வேண்டும்.

வேறு சில ஏனோ தானோக்கள்போல் இலட்சிய வாதிகளாகிய நாமும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற போக்கில் நடந்துகொள்ளக் கூடாது.

திராவிடநாடு பிரியவேண்டும் — அடிமைத் தளை அறுபடவேண்டும்—விடுதலைபெற்று விளங்கவேண்டும் — தீமை ஒழிந்து நலம் பெறுதல் வேண்டும் — அப் பொழுதுதான் நாடு நலம்பெறவும், மக்கள் நல்வாழ்வு பெறவும் முடியும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்கள் நாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம், மற்ற உதிரிகள்போல் ஒன்று பேசி இன்னொன்று செய் பவர்களல்ல. பேசியதையே செயலிலும் கொண்டு வருபவர்கள். கடைசிவரை அதிலேயே இலயத்திருப் பவர்கள்.

இன்று திராவிடநாடு, நாளை தமிழ்நாடு, மறுநாள் இன்னொன்று என்று பேசி ஏமாற்றுவதோ, ஏமாந்தவர் களோடு உறவாடி, பின்னர், அவர்களாலேயே காலை வாரி விடப்படுவதோ நம்முடைய கொள்கையுமல்ல— முறையுமல்ல.

நாம் கொண்ட கொள்கையில் உறுதி—இலட்சி யத்தில் நம்பிக்கை வைத்துப் பணியாற்றுபவர்கள்.

நாம் ஒன்றும் ஆற்றோர நாணற்புல் அல்ல.

இது ஒன்றுதான் நம்மை வாழ வைக்கும் என்று ஆராய்ந்து முடிவு கட்டி அதனையே நமது குறிக்கோளா

கக் கொண்டுவிட்ட பின்னர், அதில் வெற்றி காணும் வரை பிற எதுவும் நம்மை வந்து அண்டாது—அண்ட விடவும் மாட்டோம்.

திராவிட நாடு பிரிந்தால்தான் நாடு செழிப்புற்று, நாம் வாழ முடியுமென்று தெரிந்த பின்னர் வேறு எந்தத் தீய ஆற்றல்களும், ஆசை மொழிகளும் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது.

இந்த அசைக்க முடியாத நம்பிக்கையுடனேயே கடந்த பதினைந்து ஆண்டுகளாக நாம் அயராது பணியாற்றி வருகிறோம்.

இந்தப் பதினைந்து ஆண்டுக் காலத்தில் நாம் அடைந்த தொல்லைகளும் பட்ட துன்பங்களும் ஏராளம்! ஏராளம்!

எதைக் கண்டும் நாம் துவளவில்லை—கொண்ட இலட்சியத்தில் உள்ள துணிவை இழக்கவில்லை.

எனவே, நாம் நமக்கு ஏற்படும்—ஏற்படுத்தப்படும் இடையூறுகளையும் கொடுமைகளையும் கண்டு எள்ளி நகையாடிவிட்டு, நமது இலட்சியப் பாதையில் பொறுமையை அணிகலனாகப் பூண்டு, அதே சமயத்தில், நாம் வீரர் பரம்பரையினர், வெற்றியே அன்றித் தோல்வியைக் காணாதவர் என்பதை, இப்போதைக்கு, நம்மை எதிரிகளாகப் பாவிப்பவர்களும் உணர்ந்து தலை குனியும் வண்ணம் நாம் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

இப்போது நாம் நடத்தும் பிரிவினை வார விழாவில், அறிந்தோ அறியாமலோ நம்மைத் தங்கள் எதிரிகளாக எண்ணிக்கொண்டுள்ள எதிர் முகாமினர்—காங்கிரசுக்காரர்கள் இடையூறு உண்டாக்கும் முறையில் ஏற்பாடுகள் செய்யப்படுவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருகின்றன.

ஒருக்கால் ஏதேனும் குழப்பங்கள் இடையூறுகள் ஏற்படுமாயின், அவை அவற்றை உண்டாக்கியவர்களையே சாரும் என்ற முறையில், நாம் பொறுமையோடும், கடமையுணர்ச்சியுடனும், இலட்சியப் பிடிப்புடனும் அறவழி நின்று நமது பணி தூய்மையானது என்பதைக் காட்டிக்கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும்.

இந்தப் பிரிவினை வார விழா நமக்கு ஒரு சோதனை என்றுகூடச் சொல்லுமளவுக்குக் காங்கிரஸ் நண்பர்கள் தங்களுக்கு என்றுவைத்துக்கொண்டிருக்கும்ஆகா வழியில் இறங்க முற்பட்டுள்ளனர்.

எனவே, நாம் மிகவும் எச்சரிக்கையாக நடந்து, நம்மீது எந்தவிதமான பழியும் சுமத்தப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இதுவே, நாம் சிறைக்குள்ளிருக்கும் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் செய்யும் கைம்மாறாகும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

காரணமாகவேகிட்டத்தட்ட இறந்து போய்விட்டார்.

இன்று அவர் உயிரோடிருப்பதற்கும் அதே இசைதான் காரணம் என்பது வியப்பு நிறைந்த செய்தியாகும்.

வால்டர் ஒரு அமைதி நிறைந்த மனிதர். உணர்ச்சி நிறைந்த மனிதர். இப்போது இவர் சிறு சிறு இசைகளை அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார். கிளாஸ்கோவுக்குச் சிலகல் தொலைவிலுள்ள ஏர்டிரி என்னுமிடத்தில் உள்ள கோயில் ஒன்றில் இசை நிகழ்த்தும் பணியையும் இவர் ஏற்றிருக்கிறார். அவர் இசை நிகழ்த்திக்கொண்டிருக்கும் போது சில சமயம் ஓங்கிய ஒலி எழுந்துவிடுவதும் உண்டு. அப்படி ஓங்கொலி எழும்போதெல்லாம் நாசிச செருமனியில் அவர் வதிந்திருந்த இருண்ட நாட்களைப்பற்றி எண்ணிக்கொள்வதுண்டு.

1936-ல் அப்போது அவருக்கு வயது 27. அவர் தம் சொந்த ஊரான வியன்னாவிலிருந்து பெர்லினுக்குச் சென்றார். அங்கே பியானோ இசை நிகழ்ச்சிகள் சிலவற்றில் அவர் தொடர்ச்சியாகக் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. அந்த வேளைதான் இந்த உள்ளமுருக்கும் விந்தை நிறை நிகழ்ச்சி நிகழ்ந்தது.

ஒருநாள் வால்டர் நிகழ்த்திய இசை நிகழ்ச்சிக்கு கோயரிங் என்பானும் கோயபெல்சும் வருகை தந்திருந்தனர்.

அவர்கள் அன்றே வால்டரைப்பற்றி இட்லரிடம் சொல்லிவிட்டனர். இட்லர் உடனே உத்தரவு போட்டான் அந்த இளம் கலைஞன் தன் அவையில் வந்து இசை நிகழ்ச்சி நடத்த வேண்டுமென்று.

வால்டரின் இசையில் இட்லர் தன்னை மறந்து மூழ்கிப்போய்விட்டான். அந்த இசை அவனைக் கொக்கிபோட்டு இழுத்துக்கொண்டு விட்டது.

“அடுத்த மூன்றாண்டுக்காலம் வரை நான் இட்லரின் அந்தரங்க இசைக்கலைஞனாக அமர்த்தப்பட்டிருந்தேன்.” என்றார் வால்டர் என்னிடம்.

“என்னால் என்ன செய்யமுடியும்? நானோ ஒரு வெறும் இசைக்கலைஞன். அவனோ அந்தச் செருமானிய நாட்டையே ஆட்டிப்படைக்கும் பேரதிகாரி. அவன் கட்டளைக்கு நான் அடிபணிய முடியாது என்று மறுத்துக் கூறியிருக்கலாம். அதனால் விளையும் பயன் என்ன? வெகு வெகு எளிதில் உடனடியாக அவன் என்னை அழித்தொழித்திருப்பான்.

அவர் செய்த குற்றம்.

“இசை இன்பத்தைத் துய்ப்பதில் அளவுமீறிய, ஆவல் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான் இட்லர். அதிலும் பீதோவனின் இசை என்றால் அவனுக்கு உயிர். இத்தனைக்கும் இட்லர் இசைக் கலையில் எவ்வித பயிற்சியும் பெற்றவனில்லை. இசையைப் பாராட்டிப் பெருமிதம் கொள்வதோடு அவன் காட்டிய ஈடுபாடு சரி.

“நான் நூற்றுக்கணக்கான தடவைகள் இட்லருக்காக இசை நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறேன்.” என்றார் வால்டர் ஆய்போயிக்.

தன் உள்ளத்தைக் கவர்ந்த பீதோவனின் இசைகளைத் தான் மட்டும் கேட்டுக்கொண்டிருப்பதில் நிறைவு காணவில்லை இட்லர். அந்த இசையின்பத்தை ஐரோப்பாவில்

(13-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவும் தேசியமும்

முன்னடினர்கள், பின் கலைந்தார்கள், இல்லாத ஒன்றைப் பேசி. இந்தியா என்பது பன்னெடுங்கால மாக ஒரே நாடாய், ஒரே சரித்திர மாய், ஒரே பண்பாட்டின் உறைவிட மாய் இருந்ததுபோல எண்ணி, அதைத் தி. மு. க. அழித்தொழிக்க வந்தது என மருண்டு, சென்னையில் இந்திய ஒருமைப்பாட்டுத் தூணைக் குழுவினர், இருநாட்களாகக் கவைக் குதவாப் பேச்சுக்களைப் பேசிக் கலைந் தனர். தி. மு. க.வை அழிப்பதன் மூலமே 'இந்திய தேசிய'த்தை உரு வாக்க முடியும் என எண்ணுகிறர் கள். அவர்கள் எண்ணுகின்ற அந்த 'இந்திய தேசியம்' என்ற ஒன்று என்ருவது இருந்ததா? அதற்கு ஏதாவது ஆகாரமுண்டா? அந்தத் தேசியத்திற்கு ஏதாவது இலக்கணமுண்டா? என்ருல் இல்லை இல்லை என்பதுவே பதில். சரித்திர ஆதாரமோ, அல்லது வேறு எந்த ஒரு ஆதாரமோ இல்லாத,இருக்கவும் முடியாத 'இந்திய தேசிய'த்தைக் கற்பனையால் உருவாக்கி, அதைக் காத்து, அதன்மூலம் தங்களைக் காத்துக்கொள்ள, உண்மையான மறுக்கமுடியாத சரித்திர ஆதாரங் களும், மற்ற ஏனைய எல்லா ஆதா ரங்களையும் உடைய 'திராவிட தேசிய'த்தை அழிக்க முற்படுவது, 'அரசனை நம்பிக் கணவனைக் கை விட்ட' செயலாகும்.

இந்தியா என்றழைக்கப்படும் இங் கிலப்பரப்பு வெள்ளையர் ஆட்சிககு முன் எக்காலத்திலும் ஒரே ஆட்சி யின் கீழ் இல்லை. அசோகன், கனிஷ்கன், ஹர்ஷன், சந்திரகுப்தன் அக்பர் முதலிய மன்னுதி மன்னர் களும் இந்தியாவை ஒரு ஆட்சியின் கீழ் கொண்டுவர எண்ணித் தோல்வி யடைந்தஅவலத்தைச்சரித்திரத்தின் ஒவ்வொரு எழுத்தும் சொல்லும். இராமாயண மகாபாரத காலங்களில் கூட இங்நிலப்பரப்பு 56 நாடுகளா கவே இருந்தது.

1858-ல் விக்டோரியா இராணி வெளியிட்ட அறிக்கைக்குப் பிறகு தான், இங்நிலப்பரப்பு 'இந்தியா' என் னும் பெயருடைய ஓர் ஆட்சியின் கீழ் வந்தது. பிரிட்டிஷார் தமது ஆட்சி சரியாக நடக்க வசதி தேடிக் கொள்ளவே அப்படிச் செய்தனர். இந்தியா ஓர் ஆட்சியின்கீழ் வந்த தென்ருல், அது ஒரே தேசியத்தின் கீழ் வந்துவிட்டது என்று கருதுவது மன்னிக்கமுடியாத குற்றமாகும்.

இந்தியாவை ஓர் ஆட்சியின்கீழ் கொண்டுவந்ததில் வெற்றி பெற்ற ஆங்கிலேயர்கள்கூட, இந்தியாவை ஒரு தேசியமாக்கும் முயற்சியில் படுதோல்வியடைந்திருக்கிருர்கள்.

மெகாலே இந்தியாவில் ஆங்கில மொழியையும், ஆங்கிலக் கல்வி முறையும் புகுத்தியபோது 'இந்திய தேசிய ஒற்றுமை'யை உருவாக்கு வதுதான் என் நோக்கம் என்ருன்.

இ. உதயவினன்

ஆனுல் அப்போதிருந்த அறிஞர்கள் 'ஆங்கில நாட்டுடன் எவ்விதத் தொடர்புமில்லாத ஒரு வர்க்கத்தின் மீது, ஆங்கில ஏகாதிபத்தியத்தை 'கப்சிப்' என்று நிறைவேற்றுவதே மெகாலேயின் திட்டம்' என்று கூறிப் பலமாக எதிர்த்தனர்.

"ஆண்டால் நாங்கள் ஆளுவோம், இல்லையேல் எங்கள் துப்பாக்கி முனை ஆளும்" என்று கூறிய வெள்ளையர்களே இங்கு ஒருதேசி யத்தை உருவாக்குவதில் தோற்ற போது, இந்த வெத்துவேட்டுகள், இந்தியையும் கோதுமையையும் புகுத்தி எல்லாரையும் இந்தியராக்கி விடலாம் என எண்ணுவது அறி யாமையாகும்; அசட்டுத் துணிச்ச லாகும். உலகமுழுமையும் வல்லமை வாய்ந்த ஆங்கிலமே, இங்கொரு தேசியத்தை உருவாக்குவதில் மண் ணைக் கவ்வியபோது, நேற்றுப் பிறந்த இந்த இந்தி இங்கு ஒரு தேசி யத்தை உருவாக்கும் என்று நினைப் பதே நகைப்பிற்குரியதாகும்.

எப்படி, இவ்வுலகத்தில் ஐரோப் பியர் என்ருெரு இனம், ஆசியர் என்ருெரு இனம், ஆப்ரிக்கர் என் ருெரு இனம் இல்லையோ, அப்படியே இந்தியர் என்ருெரு இனமோ, இந்தியா என்ருெரு நாடோ இருப்ப தாக நாம் மட்டுமல்ல, உலக அரசி யல் அறிஞர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

சர் ஜான் ஸீலி என்பவர் இந்தியா வின் ஒவ்வொருதுறையையும் நன்கு ஆராய்ந்து, "இந்தியா: அதன் நிர் வாகமும் வளர்ச்சியும்" என்ற தனது நூலில், இந்தியாவைப்பற்றி விமர்சனம் செய்யும்போது,

> "ஐரோப்பிய கருத்துக்கள் பிரதி பலிக்கும் முறையில் தேசிய ஒற்றுமையோ, அரசியல் ஒற்று மையோ உடைய இந்தியா என்று ஒரு நாடு எப்போதும் இருக்க வில்லை. இப்போதிருக்கவுமில்லை. இந்தியாவிற்குள்ளும் அத்தகைய தேசம் இல்லை"

என்று கூறுகிருர்.

ஜான்ஸ்ராட்சி என்பவரும் இந் தியா ஒரு தேசிய இனமல்ல என் னும் நமது உள்ளக் கருத்தையே பிரகடனப்படுத்துகின்ருர். அவர் "இந்தியாவின் விஸ்தரிப்பு" என் னும் தனது நூலில்.

"இந்தியா ஒரு தேசிய இனமென் பது இழிவான தவறை அடிப்படை யாகக்கொண்ட எண்ணமாகும். இந்தியா என்பது ஒரு அரசியல் பெயரல்ல. ஐரோப்பா, ஆப்பிரிக்கா என்ற சொற்களைப்போலவே அது

வும் ஒரு பூகோளப்பெயர். ஒருதேசிய சமுதாயத்தின் பிரதேசத்தையோ, ஒரு மொழியின் பிரதேசத்தையோ அது குறிக்கவில்லை. பலதேசிய சமுகங்களும், பல மொழிகள் வாழும் கண்டத்தையும் அது குறிக்கிறது.''

என இந்தக் காங்கிரசு ஏகாதிபத்தியர்களின் குரல்வளையைநெருக்கும் வகையில் கூறுகின்றார்.

ஆனல், உண்மையை அறிய விரும்பாத காங்கிரசிலுள்ள அவசரக்காரர்கள், "வெள்ளையனை இங்கிருந்து விரட்டியபோது விளங்கிய ஒற்றுமை இந்திய தேசியத்தின் உயிரல்லவா? காந்தியின் தலைமையின் கீழ் விளங்கிய மக்களின் ஒற்றுமை இந்திய தேசியத்திற்கும் சான்றல்லவா? அதை நிலைநாட்டவே இன்று நேருவின் மகத்தான தலைமையின் கீழ் கூடியுள்ளோம். வாழ்க இந்தியா, வாழிய பாரத மணித்திருநாடு'' என்று கூறிக்குரல் எழுப்புகிறார்கள். இதையே ஒருமைப்பாடடுக் குழுவினரும் வலியுறுத்தித் தங்கள் அவசரமுடிவைப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துகிறார்கள்.

வெள்ளையனை எதிர்க்க மக்களை ஒன்றுபடவைத்தது உண்மை. காந்தியின தலைமையில் மக்கள் ஒன்றுபட்டதும் உண்மை. ஆனல் அதே நேரத்தில் அது 'தேசிய இனத்திற்கான ஒற்றுமையல்ல என்பதும் முழுக்க முழுக்க உண்மை.

தேசிய இனம் என்பதற்கு இலக்கணம் கூறவந்த ஸ்டாவின், "பொதுவான மொழி, பொதுவான நாடு, பொதுவான பொருளாதார நிலை, பொதுவான கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் பண்பாட்டு நெறிகள் ஆகிய இவற்றையுடைய சரித்திர ரீதியான மக்கட்சமுகமே தேசிய இனம் எனப்படும்'' என்று ''மார்க்சிசமும், தேசிய பிரச்சனையும் காலனிபிரச்சனையும்'' என்ற தனது நூலில் கூறுகிறார்.

சர்வதேச அரசியல் அறிஞர்கள் அனைவருமே ஏற்றுக்கொண்டிருக்கின்ற இதேசிய இனத்திற்கான இலக்கணம் 'இந்திய தேசிய'த்திற்கு எள்ளளவும் ஒன்றுபட்டு வரவில்லை. 1919-ல் இந்திய அரசியலில் குதித்த காந்தியடிகள் உண்மையான 'இந்திய தேசியத்தை இங்கு காணவில்லை. அவரால் காணவும் முடியவில்லை. பல்வேறு இனங்களாக மக்கள் பிரிந்திருப்பதைக் காந்தியடிகள் நன்கு உணர்ந்தார். "ஒன்றுபட்ட மக்களினமே சுதந்திரததிறகாகப் போராடி அதைப் பெறவும, பின் அதைப் பேணி காக்கவும் வல்லவர்கள்'' என்னும் கிளாஸ்டனின் கருத்திற்கொப்ப, காந்தியடிகள், ஒற்றுமையற்ற மக்களின் துணை கொண்டு 'சுதந்திர இலட்சிய'த்திற்காகபோராடவிரும்பவில்லை. மாருகச் சுதந்திர இலட்சியத்தை பயங்கரமாக எதிர்த்தார்.

"1921-ஆம் ஆண்டு அகமதாபாத்தில் காங்கிரசு மகாநாடு நடந்தது. அம்மகாநாட்டில் முஸ்லீம் தலைவரும் குடியரசு வாதியுமான ஹஸரத் மோஹனி ஒரு தீர்மானம் கொண்டு வர விரும்பினர். 'அன்னிய ஆதிக்கம் முழுவதிலிருந்தும் விடுதலையடைந்த பரிபூர்ண சுதந்திரம்' என்ற இலட்சியத்தை விளக்கும் தீர்மானம் அது. காந்தி அதைக் கடுமையாக எதிர்த்தார். 'அது பொறுப்புக் குறைவைக் காண்பிப்பதால் அது என்னைத் துயரத்தில் ஆழ்த்தியது என்ருர். அந்தத் தீர்மானத்தை நிராகரிக்கும்படி செய்தார்.

அதுபோலவே சென்னையில் காங்கிரசு மாநாடு அப்போது கூடியது. காந்தியார் எப்போதும் எதிர்த்து வந்த பரிபூர்ண சுதந்திர இலட்சியத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. ஆனல் காந்தியார் அந்த மகாநாட்டிற்கு வரவில்லை. 'இந்தத் தீர்மானம் அவசரத்தில் உருவாகி யோசனையில்லாமல் நிறைவேற்றப் பட்டது' என்று பின்னல் கண்டித்தார்''

-("இன்றைய இந்தியா'' இரஜனிபாமிதத்)

சென்னையில் நிறைவேற்றப்பட்ட சுதந்திரத் தீர்மானத்தைக் கண்டித்து 1927-ஜனவரி மாதம் 9-தேதி நியூயார்க் ஓர்ல்ட் (Newyark world) என்ற செய்தித்தாளில் "சுதந்திரத் தீர்மானத்தைக் கண்டு யாரும் பயப்படவேண்டியதில்லை'' என்று அறிக்கை வெளியிட்டார்.

இந்திய மக்கள் ஓர் இனமாகக் கூடுவதற்கு முன் காந்தி சுதந்திரத்திற்காகப் போராடுவதை விரும்பவில்லை. எனவே இந்திய மக்களை ஒரு தேசியத்தின்கீழ் கொண்டுவரப் பாடுபட்டார். அதற்காக இந்தியை தேசிய மொழியாக மாற்றிவிட்டால் மக்களை ஒருதேசிய இனமாக்க முடியும் எனக்காந்தியடிகளும் காங்கிரசு தலைமையும் எண்ணியது.

1922-ம் ஆண்டில் அகில இந்திய காங்கிரசு இந்தி மொழியே இந்தியாவின் தேசிய மொழியாக வேண்டுமெனத் தீர்மானம் கொண்டு வந்தது. தீர்மானம் தீர்மான அளவிலே நின்றது. நடைமுறையில் பயன் படவில்லை. பின்னர் காந்தியடிகள் தேவநாகரி லிபியைப் பற்றி பரவலாகப் பிரச்சாரம் செய்தார். அவர் பிரச்சாரமும் பிரச்சாரத்தோடுதான் நின்றது.

பண்டித நேருவும் இந்திமொழியே இங்கு ஒரு தேசியத்தை உருவாக்கும் எனக் கனவு கண்டிருந்தார்.

"இந்தியாவில் உள்ள 35 கோடி மக்களுள் 12 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இந்தியையும் அதன் பல்வேறு திரிபுகளையும் பேசுகிறார்கள். ஆனல் 35 இலட்சம் பேர்களே இங்கு ஆங்கிலத்தைப் பேசுகிருர்கள். இந்தியாவில் ஒற்றுமையை உருவாக்கப்போவது ஆங்கிலமல்ல, இந்தியே''

-("இந்தியாவும் உலகமும்'': நேரு)

இநதிமொழி மூலம் ஒரு தேசியத்தை உருவாக்கத் தலைவர்கள் பட்டபாடெல்லாம் [illegible] ஞ யிற்று. எனவே, ஒற்றுமையற்ற மக்களின் துணையால் சுதந்திரத்திற்குப் போராடுவது கடினம் என எண்ணிக், காங்கிரசு சுயராஜ்யத்திற்காகப் போராடியது. ஆனல் மக்களோ சுயராஜ்யத்தைவிட விடுதலையையே பெரிதும் விரும்பினர். இதை நேருவே விளக்கிக் கூறுகிருர்.

"சுயராஜ்யம் என்பது விடுதலையைவிட மிகக் குறைவான தென்பதை மற்றைய தலைவர்களும், பொதுமக்களும் வெளிப்படையாய் உணர்ந்திருந்தனர். இந்த விஷயத்தைப் பற்றிக் காந்தியடிகளிடம் தெளிவே இல்லை. அதைப்பற்றித் தெளிவாகச் சிந்திப்பதையும் அவர் ஆதரிக்கவில்லை''

-("சுயசரிதை'': நேரு)

பொதுமக்களும் தலைவர்களும் சுதந்திர இலட்சியத்தையே அதிகமாக விரும்பினர். ஆனல் சுதந்திர இலட்சியத்திற்குப் போராடவேண்டிய தேசிய ஒற்றுமையோ மக்களிடையே இல்லை. இரு முரண்பட்ட சக்திகளிடையே காந்தியார் நின்று தவித்தார். எனவே காந்தியடிகள் இந்திய மக்களை ஒரு கூட்டின்கீழ் கொண்டுவரக் கட்டாயப் படுத்தப்பட்டார். அதே நேரத்தில் மக்களைத் தேசிய இன ரீதியில் ஒன்ருக்க முடியாது என்பதையும் உணர்ந்திருந்தார். இத்துறையில் காந்தியார் ஒரு மாபெரும் புரட்சியை இந்திய அரசியலில் உண்டாக்கிஞா. பல்

வேறு இனமுள்ள மக்களை ஒன்றுக்கி வெள்ளையனை விரட்டவும் செய்தார். அவர் செய்த புரட்சிதான் என்ன? அப்புரட்சிக்குரிய மூலம் என்ன? இந்த மூலாதாரத்தை 'வின்சன்ட் ஸ்மீத்' என்பவர் 'ஆக்ஸ்போர்டு இந்திய சரித்திரம்' (History of oxford India) என்ற நூலில் கூறுகிறார்:

"இந்தியா ஒரு ஆழமான ஒற்றுமையைப் பெற்றிருக்கிறது. பூகோளத் தன்மையோ, அரசியல் தன்மையோ, உற்பத்தி செய்ய முடியாத ஒற்றுமை அது. இரத்தத்தாலும் மொழியாலும் பண்பாட்டாலும் கணக்கற்ற இனங்களாக உள்ள அவர்களை 'இந்து மதம்' என்ற அடிப்படை அவர்களிடையே ஊடுருவிச் செல்கிறது"

ஆம்! இந்தஇந்து மதத்தைத்தான் காந்தியார் தன் அரசியல் புரட்சியில் கேடயமாகப் பயன்படுத்தினுர். மொழியோ, பண்பாடோ, சரித்திரமோ ஒன்ருக்க முடியாத மக்களை இந்துமதம் ஒன்ருக்கி வைக்கும் என எண்ணினுர். இன ரீதியாகக் காணும்போது பல்வேறு பிரிவுகளை உடைய மக்களை மத ரீதியில் நோக்கும்போது ஒரு கூட்டின்கீழ் வருவதைக் காந்தியடிகள் கண்டார்.

"இந்தியாவில், 25 கோடி 40 இலட்சம் இந்து மதத்தினர் இருக்கிருர்கள். அதாவது ஜனத்தொகையில் 63·93 சதவீதம். இதில் பிரிட்டிஷ் இந்தியாவில் 19 கோடி பேர் வசிக்கிருர்கள். அதாவது பிரிட்டிஷ் இந்திய ஜனத்தொகையில் 64·5 சதவீதம். சமஸ்தானங்களில் 6½ கோடி இந்துக்கள் உள்ளனர். (சமஸ்தான ஜனத்தொகையில் 70·57 சதவீதம்)"

-(1925 வருட சென்சஸ் கணக்கு)

இந்து மதத்தினர் பெரும்பான்மையோராக இருப்பதனுல் காந்தியடிகளும் காங்கிரசுத் தலைமையும் மதத்தால் இந்தியரை ஒன்ருக்க முடியுமென எண்ணினர். அதன்மூலம் வெள்ளையரை விரட்டிச் சுதந்திரம் பெற இயலும் என நம்பினர். எனவே இந்து மதத்தைக் காங்கிரசோடு ஒன்ருக இணைத்தனர். காந்தியடிகள் அரசியலில் மிக அதிகமாக இந்து மதத்தைப் பிரச்சாரம் செய்தார்.

"காந்தியாரின் பிரச்சாரம் முழுவதிலும், கிளர்ச்சி முழுவதிலும் இத்தவறே பிரதானமாக இருந்தது. பொதுப்படையான அரசியல் இலட்சியங்களைப்பற்றிய அவரது மத ரீதியான கருத்தும், பிரச்சாரமும் இந்து மதப் பிரசாரத்துடன் பிரிக்க முடியாதபடி பின்னிக் கிடந்தன"

-("இன்றைய இந்தியா: இராஜனி பாமி தத்)

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட காந்தியடிகள், மக்களை 'இந்தியர்கள்' என்று பொதுவாக அழைப்பதற்கு பதில் 'இந்துக்கள்' என்று மத ரீதியிலேயே அழைத்தார். மக்கள் தலைவர் என்ற முறையில் எதையும் அவர் பிரகடனப்படுத்தியதில்லை. இந்து தலைவர் என்ற ரீதியில்தான் பிரகடனப்படுத்தினுர்.

"முஸ்லீம்களின் இதயத்தை வெல்லவேண்டுமானுல் 'இந்துக்களாகிய நாம்' தவம் செய்ய வேண்டும்"

-("யுவ இந்தியா"- 1924 செப்டம்பர்)

"காந்தியடிகள் தம் சமயத்தை முதல் முதல் தேச மகா சபையாகிய காங்கிரசு வழி வளர்க்க முயன்ருர். காங்கிரசும் அவர் போதனையை ஏற்று நடந்து வருகிறது"

-("தமிழ்ச் சோலை--திரு. வி. க.)

ஒன்றுபட்ட இயக்கத்தின் தலைவரென்ற முறையில் ஒவ்வொரு வார்த்தையையும், உச்சரிக்க வேண்டிய பொறுப்பு அவரிடம் இருந்தபோது, அவர் தன்னை 'இந்து சனுதனி' என்று இந்து மதக் கோலத்தில் பிரகடனப்படுத்திக்கொண்டார்.

"நான் என்னை ஒரு இந்து சனுதனி என்று அழைத்துக் கொள்கிறேன்" ஏனெனில்,

1. வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், வேதாகமங்கள் என்று சொல்லப்படும் சகலத்திலும் எனக்கு நம்பிக்கை உண்டு.
2. வேதம் வகுத்துள்ள வர்ணுசிரம தர்மத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு.
3. பசு பாதுகாப்புக் கோட்பாட்டில் எனக்கு நம்பிக்கை உண்டு.
4. விக்கிரக ஆராதனையை நான் நம்பாமலில்லை.

-("யுவ இந்தியா--1921 அக்டோபர் 12" காந்தி)

காந்தியார் தன்னை 'இந்து சனுதனி' என்று அழைத்துக் கொண்டார். அந்த 'சனுதனி' என்ற சொல்லுக்கு நேரு தரும் விளக்கத்தைப் பாருங்கள்.

"பின்னேக்கிச் செல்லுமிந்த ஓட்டப்பந்தயத்தில் இந்து மகா சபையை ரொம்பத் தூரம் முந்திக் கொள்கிருர்கள் சனுதனிகள். இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியிடம் பக்தி விசுவாசம் காண்பித்து உரக்கப் பிரகடனப்படுத்துபவர்கள்; தீவிரமான வைதீக மௌடிகத்தைத் தழுவி நிற்பவர்கள்"

--("சுயசரிதை:"--நேரு)

"நவீன தேசியப் போராட்ட இயக்கத்தால் எந்த நிமிடமும் காந்தியார் காங்கிரசு அரசியலிலிருந்து இந்து சீர்திருத்த இயக்கத்துக்குப் போய்விடுவார். எந்த நிமிடமும் இந்து சீர்திருத்த இயக்கத்திலிருந்து காங்கிரசு அரசியலுக்குத் திரும்புவார். இவ்வாருக காங்கிரசின் தனிப்பெரும் தலைவரான காந்தியடிகளார் காங்கிரசின் பிரதான பிரதிநிதி என்று பொதுமக்களால் கருதப்பட்டவர் இந்து மதத்தின் இந்து மறுமலர்ச்சியின் தலைவராகவும் விளங்கினுர். இந்தத் துறையில் காந்தியார் பிரதான குற்றவாளியாயிருந்த போதிலும், காங்கிரசு முகாமிலிருந்த ஏனைய தலைவர்களும், குறிப்பாகக் காந்தியவாதிகள் பலரும் இந்த முறையில்தான் நடந்து கொண்டார்கள். இந்தச் சூழ்நிலையில் பகைவர்கள் மாத்திரமல்ல, பொதுவான அபிப்பிராயத்தின் பெரும் பகுதியும் காங்கிரசை "இந்து இயக்கம்" என்று பெயர் சூட்டியதில் வியப்பென்ன?"

--("இன்றைய இந்தியா"-- R. B. தத்)

1922 பிப்ரவரியில் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை வாபஸ் வாங்கிக்கொண்டார். அப்போது மாபெரும் இந்துமத வாதிகள் சுதந்திரத்திற்காகப் போராடுவதற்குப் பதிலாக, முஸ்லீம்களுக்கு எதிராக, அகில இந்திய ரீதியில் லஜபத்ராய் தலைமையில் இந்து மகா சபையை ஆரம்பித்தார்கள். அரசியல் ரீதியில் இந்து மதத்தைப் பிரச்சாரம் செய்வதே அதன் முக்கிய நோக்கமாகும்.

காங்கிரசுத் தலைவர்களிடையே அதிகமாக இந்துமத வெறியிருந்தது. மற்ற மதத்தினரை மிகவும் இழிவாகக் கருதினர். டாக்டர் அம்பேத்கார் கோலாப்பூர் மகாராஜாவின் உதவியுடன் "மூக் நாயக்" (ஊமைத் தலைவன்) என்ற செய்தித்

தானே ஆரம்பித்தார். அதன் விளம்பரத்தை வெளியிடத் திலகரின் "கேசரி" என்ற செய்தித்தாள் மறுத்துவிட்டது. இதைப்பற்றி டாக்டர் அம்பேத்காரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஓ. கே. நம்பியார் எம். ஏ. கூறுவதாவது:

"'மூக்நாயக்'கை விளம்பரப் படுத்தத் திலகர் மறுத்துவிட்டார். டாக்டர் அவர்கள் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பதற்காகவா ஒரு தலைவரிடம் இந்துமத வெறி இருப்பது?" என மனம் புழுங்குகின்றார்.

காங்கிரசும்—லீகும் இலட்சுமணபுரியில் மாநாடு கூட்டின. காங்கிரசு சார்பில் திலகர் கலந்துகொண்டார். அப்போதும் அவர் தன்னை "இந்து மதப் பிரச்சாரகர்" என்பதைப் பிரகடனப் படுத்திக்கொள்ளத் தவறவில்லை.

"கனவான்களே! இந்துக்களாகிய நாம் நமது முகம்மதிய சகோதரர்களுக்கு அதிகமாக விட்டுக்கொடுத்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. நாம் அதிகமாக விட்டுக்கொடுத்துவிடவில்லை என்று நான் கூறும்போது, அகில இந்தியாவிலுள்ள இந்து வகுப்பின் அபிப்பிராயத்தை பிரதிநிதித்துவப் படுத்துகிறேன் என்பது நிச்சயம் ......"

1945-ம் வருடம் டிசம்பர் மாதம் 10ம் தேதி, ஒரு பேட்டியில் முகம்மதலி ஜின்னா, காங்கிரசிலிருந்து, லீக் பிரிந்து சென்றுவிட்டதற்குப் பல காரணங்கள் கூறும்போது, அவற்றுள் ஒன்றாக இந்து மதப் பிரச்சாரத்தைக் கூறுகின்றார்.

"காங்கிரசு பிரசாரத்திலிருந்த மறுக்கமுடியாத இந்து மணமும், காங்கிரசின் வலதுசாரி தலைமையும் செய்த பிரச்சாரத்திலிருந்த இந்து மணமும் எங்களை வசியப் படுத்தவில்லை."

இவ்வாறாகக் காங்கிரசு செய்த இந்துமதப் பிரச்சாரத்தால், பொது மக்கள், மதம்தான் 'தேசியம்' என்று எண்ணி'இந்திய தேசிய'த்திற்காகப் பாடுபடுவதைவிட 'இந்து தேசிய'த்திற்காகவே பாடுபட்டனர் என்பதை நேருவே ஒப்புக்கொள்கின்றார்.

"தேசியம் என்பது பொதுவாக முஸ்லீம்களுக்கு 'முஸ்லீம்தேசிய'மாகவும், இந்துக்களுக்கு தேசியமென்றால் 'இந்து தேசிய'மாகவும் விளங்கியதே ஒழிய 'இந்திய தேசிய'மாகவும் விளங்கவில்லை. இருதிறத்தாரும் தம் தம் முத்திரைப் பொறித்த தேசியங்களுக்காகவே போராடினர்."

-'உலகசரித்திரம்' 2-ம் தொகுதி: நேரு

சர்வதேச அறிஞர்கள் சொல்கின்ற 'ஓர் இன'த்திற்கான இலக்கணப்படி இங்கு ஒரு தேசியம் உருவாகவில்லை. மாறாக மதத்தின் அடிப்படையிலேயே தேசியம் உருவாயிற்று. அப்படி மதத்தால் ஒற்றுமையாக்கிக்காட்டியது ஏனெனில், ஒன்று, பொதுவாக சுதந்திரப் போராட்டத்தில் மக்கள் ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்பது. மற்றொன்று, வெள்ளையர்கள் இந்தியாவிற்குச் சுதந்திரம் தர மறுத்து, அதற்காக அவர்கள் காட்டிய ஒரே காரணம் இங்கு ஒற்றுமையில்லை என்பதுதான்.

"இந்து—முஸ்லீம் ஒற்றுமை ஏற்படவேண்டுமென்று அதன் முக்கியத்துவத்தை வற்புறுத்துவதால், பிரிட்டிஷார் பிரித்தாளும் கொள்கையை அனுஷ்டிக்கிறார்களென்று அர்த்தமில்லை. இந்தியாவில் ஒற்றுமையில்லை. அதுவரையில் பிரிட்டிஷ் ஆட்சி நிச்சயம்."

-'இலண்டன் டைம்ஸ்' 1941 ஜன. 21

ஏஷியாடிக்ரெவ்யூ என்ற பத்திரிகையில் 'கர்னடிகஸ்'என்ற புனைப் பெயரில் மோரதாபாத் தளபதி 'கேக்' என்பவர் எழுதியதாவது,

"நம்முடைய அதிர்ஷ்டம் இந்தியாவில் பல்வேறு வேற்றுமையும் ஒற்றுமையற்ற தன்மையும் உள்ளன. அவைகளைக் காப்பாற்றுவதன் மூலமாகத்தான் நாம் நமது ஆட்சியை இங்கு நிலைநாட்ட முடியும்"

எனவே, காந்தியடிகள் வெள்ளையர்களின் எண்ணத்தைத் தகர்க்கும் முறையிலும், அவசர அவசரமாக இந்து மதத்தால்இங்கு ஒற்றுமையை உருவாக்கினார். சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட காங்கிரசு இயக்கத்துடன் இந்து மதத்தை இரண்டறக் கலக்கும்படி செய்தார். போராட்ட ஒற்றுமைக்கு உதவிய இந்துமதம் அரசியலில் எதிர்கால ஒற்றுமைக்குப் பயன்படாது என்பதை உணர்ந்தே, இந்துமதப் பிரச்சாரக் கருவியான காங்கிரசையே கலைத்துவிடவேண்டும் எனச் சொல்லியிருக்க வேண்டும்.

ஆனால்,காங்கிரசுக்காரர்கள், தங்கள் சுயநல இலாப வேட்டைக்காக காங்கிரசைப் பயன்படுத்திக் கொண்டு, அதைக் கலைக்க மறுத்துவிட்டார்கள். தற்காலிகமாக உருவாக்கப்பட்ட "இந்துமத ஒற்றுமைமையே இவர்கள் இந்திய தேசியம்" என்று கூறித் தென்னாட்டைத் தங்கள் வேட்டைக் காடாக்கிக்கொண்டார்கள். உலகில் எங்குமே இல்லாத, இருக்கவும் முடியாத மதத்தினால் உண்டான தேசியத்தை இங்கு நிலைநாட்ட முயல்கிறார்கள். இதனால் எவ்வளவு பயங்கரமான இடையூறுகள் எழும் என்பதை நல்லறிஞர்கள் எச்சரிக்கிறார்கள்.

"மதத்தின் விளைவாக குறிப்பிட்ட அளவுக்கு ஏற்பட்டிருக்கும் பொதுவான கலாச்சாரத்தையும், மதத்தையும் தேசிய இனத்திற்கு அடிப்படையென்று கூறும் முயற்சி தேசிய இனத்தின் தன்மையைப் பற்றிய சரித்திர பூர்வமான சர்வதேச அனுபவம் முழுவதற்கும், யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட அனுபவத்திற்கு முற்றிலும் முரணானது"

-("சார்லஸ் பைனர் நவீன அரசாங்கங்கள்")

"ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் சுதந்திரம் கோரி, இந்திய மக்கள் ஒன்றுபட்டு நிற்க வேண்டுமென்பது உண்மை; எதிர்கால சுதந்திர இந்தியாவில் அரசியல் பொருளாதாரஒற்றுமை மலர வேண்டுமென்ற முற்போக்கான இலட்சியமும் அவசியமே. ஆனால் இந்திய மக்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களென்று இவற்றிலிருந்து அர்த்தப்படுத்த முடியாது. அதற்கு மாறாக, இந்திய மக்கள் சமுதாயத்தில், பல்வேறு தேசிய இனங்களிருப்பதை அங்கீகரிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன".

-("இன்றைய இந்தியா"-R.B தத்)

'இவற்றிலிருந்து இந்தியா ஒன்று' என்று கூறுவதுதான் அரசியல், பொருளாதார, சமுக அமைப்புகளுக்கு மிக்க ஆபத்தையும், நாட்டில் குழப்பத்தையும் விளைக்கவல்லதே தவிர, இனவாரியாகப் பிரிந்து சென்று இலக்கணப்படி வாழ்வது அல்ல. ஆபத்தைத் தரக்கூடிய—கற்பனையால் உருவான இந்துமத ஒற்றுமையை இந்திய ஒற்றுமையென்று சொல்வதானது, கொடிய நஞ்சினைக் காக்கும் அரவத்தை 'நல்லபாம்பு' என்று சொல்வதற்குக் கொப்பாகும்.

மேலே கூறப்பட்ட ஆதார பூர்வமான சான்றுகளை ஊன்றிப் படிப்போர் இந்திய தேசிய ஒற்றுமை வெறும் போலி என்பதை உணர்வர்.

✻

மக்கட் பாடகன்

சென்ற இதழ் தொடர்ச்சி...

எங்கோ தொலைவிலிருந்து விடியலுக்கு முகமன் கூறும் சங்கொலி, உழைப்பாளர்களை உசுப்பி யெழுப்பும் சங்கொலி காற்றோடு கலந்து, மிதந்துவந்து மெல்லொலியாக அவன் செவியிற்பட்டது. மெல்ல மெல்ல நிலம் தெரிந்து கொண்டுவருவதைப் பார்க்கமுடியா விட்டாலும், அதை உணர்ந்து கொண்டிருப்பவனாக, அந்தச் சிறைக்கோட்டத்தின் நெடுஞ் சுவரை ஊடுருவிக்கொண்டிருப்பவன்போல் உற்றுநோக்கிக்கொண்டிருந்தான் பாடல் வல்லான்.

இப்போது அவன் உள்ளத்தில் எந்தக் கவலையும் இல்லை. எந்த எண்ணமுமில்லை. எந்த அச்சமுமில்லை. எந்த வேதனையுமில்லை. 'வருவது வருக, நடப்பது நடக்க' என்று முடிவுகட்டிவிட்டு — யாரோ சொல்லிவிட்டுப் போயிருக்கின்றார்களே, "சும்மா இருப்பது" என்று அப்படி இருந்தான் அவன்.

சிறைக் கதவுகள் திறக்கப்பட்டன. காவலர் இருவர் உள்ளே நுழைந்தனர். பாடல்வல்லான் எழுந்து அமரவில்லை. எழுந்தமர அவனால் முடியவில்லை. அப்படியே, படுத்தபடியே கிடந்தான். உள்ளே நுழைந்த காவலர் இருவரும் அவனை எழுந்து நிற்கச்செய்தனர். தட்டுத் தடுமாறிக்கொண்டு நடந்தான் பாடல்வல்லான். பாதி நடத்திக் கொண்டும் பாதி இழுத்துக்கொண்டும் சென்றனர் காவலர் இருவரும்.

சிறு ஊர்தியொன்றில் அவன் ஏற்றப்பட்டான். ஊர்தி நன்றாக மூடப்பட்டிருந்தது. உள்ளே இருப்போரால் வெளியில் உள்ள எதையும் பார்க்கமுடியாது. வெளியிலிருந்து பார்ப்போர்க்கும் அந்த ஊர்திக்குள்ளிருக்கின்ற ஒன்றைக் கூடக் கண்டுகொள்ள முடியாது.

ஊர்தி கிளம்பிற்று, சிறு பொழுதில் அது ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது. பாடல்வல்லான் கீழே இறக்கப்பட்டான். அந்த இடம் எது என்று அவனால் கண்டுகொள்ள முடியவில்லை.

அது ஓர் எழில் நிறைந்த பூங்கா. அதன் நடுவே ஓர் மூன்றடுக்குக் கட்டிடம். அந்தக் கட்டிடத்தின் மாடிப் படியின்முன் பாடல் வல்லான் ஏறிச் சென்ற ஊர்தி நிறுத்தப்பட்டிருந்தது.

வெளியில் எதையும் ஊன்றிப் பார்க்கும் வகையிற் பாடல்வல்லானைக் காவலர் அங்கே நிறுத்தி வைத்திருக்கவில்லை. உடனே அவன் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டு விட்டான்.

உள்ளே மூன்றாவது அடுக்குக்கு அவன் அழைத்துச் செல்லப்பட்டான். அது ஒரு சிறிய மாளிகை தான். ஆனால், எழில் மாளிகை. அந்த மாளிகையின் ஒவ்வொரு

கனகு

அறையும் ஒவ்வொருவிதமான செயற்கை வனப்பைக் காட்டிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு பக்கத்துச் சுவரும் வெவ்வேறு விதமான புதுவகை எழில் வண்ணப்பூச்சோடு அமைந்திருந்தன. தரையெல்லாம் பளிங்குக் கல் பதிக்கப்பட்டிருந்தது. அங்கே ஒவ்வோரிடத்தில் விலையுயர்ந்த, கண்ணைக் கவரும் அழகினையுடைய வெல்வெட் இருக்கைகள் போடப்பட்டிருந்தன. அங்கங்கே உன்னத கலைச்சித்திரங்கள்- பண்டைய, இன்றைய சித்திரங்கள் ஓர் ஒழுங்கமைப்பில் வரிசைப் படுத்தி வைக்கப்பட்டிருந்தன. எங்கு பார்த்தாலும் வனப்புத்துளும்பி, வழிந்துகொண்டிருந்தது. எதைப் பார்த்தாலும் எழில் நின்று சிரித்துக் கொண்டிருந்தது.

பாடல் வல்லான் திகைத்தான். 'என்னை ஏன் இங்கு அழைத்துக் கொண்டு வருகிறார்கள்? ஒருவேளை இடம் மாற்றி அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்களா? தன் ஐயத்தைக் கேள்வியாக்கப் பின்னால் வந்த காவலர் பக்கம் திரும்பினான். அவன் என்னகேட்கப் போகிறான் என்று முன் கூட்டியே தெரிந்து கொண்டிருப்பவன்போல் "உங்களை இங்குதான் அழைத்துவரும்படி அமைச்சரின் உத்தரவு" என்றான் காவலரில் ஒருவன்.

பாடல்வல்லானுக்கு எதுவுமே ஓடவில்லை, காவலர் நடத்திச்சென்ற பக்கம் அவன்பாட்டில் தடுமாற்ற நடைபோட்டுக்கொண்டிருந்தான்.

மூன்றாவது மாடியில் ஒரு பெரிய அறை. அந்த மாளிகையின் எல்லா அழகையும் ஒன்றுதிரட்டிக்கொண்டு வந்து அங்கே சேர்த்துவைத்திருப்பது போன்றதொரு தோற்றத்தையுடைய அறை!

அங்கே வெல்வெட் இருக்கையொன்றில் அமைச்சர் அமர்ந்திருப்பதை வெளியிலிருந்தவாறே பாடல் வல்லானால் காணமுடிந்தது. துப்பாக்கியும் கையுமாக நின்ற வாயிற் காப்போர் இருவரைக்கடந்து பாடல் வல்லானை உடன்வந்த ஊழியர் இருவரும் உள்ளே நடத்திச் சென்றனர்.

"வாருங்கள் பாடல் வல்லான்!" என்று இருக்கையிலிருந்து எழுந்து எதிர்கொண்டழைத்தார் அமைச்சர்.

அவன் செய்கையைப் பாடல் வல்லானால் என்னவோ நம்பமுடியவில்லை. அது நடிப்புத்தான் என்று அவனுக்கு நன்றாக விளங்கியது.

"என்ன இது தலையில்? என்ன இது காலில் கட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? கையில் வேறு கட்டு! முகம் எல்லாம் வீங்கியிருக்கிறது! உடையிற் குருதிக் கறை! ஏன், ஏன்? என்ன அநியாயம் இது! யார் இப்படிச் செய்தது? எனக்குக் கீழ் உள்ளவர்களா இப்படிச் செய்தார்கள்?"

"இல்லை. உமக்குமேல் உள்ள வர்கள்!'' என்ருன் பாடல் வல்லான்.

"கோபித்துக் கொள்ளாதீர்கள் பாடல்வல்லான்! எப்படியோ தவறு நடந்துவிட்டிருக்கிறது! இதற்கு யார் காரணமாக இருந்தாலும் சரி, அவர்களை இங்கக் கணமே சிறைக்குள் தள்ளிவிட்டுத்தான் நான் மறுவேலை பார்க்கப் போகிறேன்!—ஏய், யாரங்கே!'' பாடல் வல்லான் ஓங்கிச் சிரித்தான்.

"நல்ல வேடிக்கை! நல்ல நடிப்பு!''

"என்ன, — இதை நடிப்பென்ரு சொல்கிறீர்கள்?''

"பின்னே உண்மையா?''

"உட்காருங்கள்! உட்காருங்கள்! உட்கார்ந்து பேசலாம்! நீங்கள் என்னைப்பற்றித் தவருக எண்ணிக் கொண்டிருக்கிருக்கின்றீர்கள்!''

அந்த நிலையிற் பாடல் வல்லானுல் நின்றுகொண்டிருக்க முடியவில்லை. எனவே அவன் பக்கத்திலிருந்த மெத்தை தைத்த இருக்கையில் அமர்ந்துகொண்டு விட்டான்.

"உங்கள் பாட்டு மிக மிக இனிமையானது. பொது இடத்தில் உங்கள் பாட்டைக் கேட்டேன்! உங்களைத் தனியே அழைத்துப் பாடச் சொல்லிக் கேட்கவேண்டுமென்று எனக்கு நீண்ட நாள் ஆசை! அதற்காகத்தான் என்னுடைய ஆட்களை விட்டு உங்களை அழைத்து வரும்படி செய்தேன்! அவர்கள் என்னடாவென்ருல் உங்களை அழைத்துப்போய்ச் சிறையிலே போட்டு அடைத்து வைத்திருக்கிருர்கள். அறிவு கெட்டவர்கள்!''

"ஆமாம், சொன்னதைச் சொன்னபடி செய்த ஊழியர்கள் அறிவு கெட்டவர்கள்!''

"அ! அ! அ! அ! அ! '' உரக்கச் சிரிக்கிருர் அமைச்சர்.

"ஆமாம், நீங்கள் ஏன் நாற்சந்தியிலும், தெரு முனையிலும் பாடிக் கொண்டு திரிகிறீர்கள்?''

"நாற்சந்தியும், தெரு முனையும் தான் இந்த நாட்டின் முதுகெலும்புகள். யாரை நல்லறிஞர் எல்லாம் மக்கள் மக்கள் என்று குறிப்பிடுகின்ருர்களோ அவர்கள் புழங்குமிடும் அவைதான்!''

"என்னவோ மக்கள்! நாகரிகம் இல்லாதவர்கள்! நன்றியில்லாதவர்கள்! நான் எல்லாம் மக்களுக்காகப் பாடுபடாமலா இருக்கிறேன். பாடு பட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். பயன் என்ன? கெட்டவன் என்ற பெயர்தான்! ஒருவனுக்குச் செய்தான்! ஒருவனுக்குச் செய்யவில்லை என்ற குற்றந்தான்! பேசாமல் அந்த அந்தக் காலத்தில் அதை அதைச் செய்து அவரவர் சொந்தக் காரியங்களைச் சாதித்துக்கொள்ள வேண்டும்! அதையெல்லாம் விட்டு விட்டு இப்படி மக்கள் மக்கள் என்று அலைவதால் ஒரு நன்மையும் இல்லை!

"வேறென்றும் வேண்டாம்! உங்களுக்கு நல்ல சாரீரம் இருக்கின்றது. நீங்களே பாட்டு இயற்றவும் வல்லவராக இருக்கிறீர்! இந்த அருமையான வாய்ப்புக்களை வைத்துக் கொண்டு எவ்வளவு பெரிய காரியங்களையெல்லாம் சாதிக்கலாம் தெரியுமா?''

"அதுதான் செய்துகொண்டு வருகின்றேனே! என்னுடைய இந்தத் தொண்டுக்கு உங்களைப் போன்றவர்கள் ஊறு புரியாமல் இருந்தால் அது ஒன்றே போதுமே!''

"ஊறு! நாங்களா புரிகிறோம்? சேச்சே! அப்படியெல்லாம் இல்லை!''

"பின்னே என்ன செய்கிறீர் களாம்?''

"உங்களை நல்வழிபடுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்ரேம்!''

"நல்வழி! அப்படிக்கூட உங்களுக்குச் சொல்லத் தெரிகிறதா! வேடிக்கை! வேடிக்கை! — எது நல்வழி? மாற்ருனைப் புகழ்வது நல்வழியா? அவனுக்குத் தொழும்பு செய்வதுதான் நல்வழியா? சொந்த மூளையை இழந்து வேற்று நாட்டானுக்குக் கைக்கூலியாவதுதான் நல்வழியா? அவன் இட்ட கட்டளையை நிறைவேற்றி வைக்கின்ற வாழ்வே உரிமை வாழ்வு, ஒற்றுமையான வாழ்வு என்று மானமுள்ள யாரும் சொல்லலாமா? அறிவுள்ள யாரும் சொல்லலாமா?''

"பாடல்வல்லான்! இப்படி மானமில்லாதவன், அறிவு இல்லாதவன் என்று யாரைச் சொல்கின்றீர்?''

"சொன்னுல் கோபம் வருகின்றதே! நீங்களே உங்கள் மனச்சான்றுக்குப் பதில் சொல்லிக்கொள்ளுங்கள் பார்க்கலாம்!—மாற்ருனும் நீங்களும் ஒன்று என்கிறீர்களே இதுவரை எத்தனை தடவை அவன் உங்களுக்குக் கட்டளை போட்டிருக்கிருன்! உங்களால் ஒரு தடவை யாவது அவனுக்குக் கட்டளைபோட முடிந்ததா?''

"கட்டளையாவது ஒன்ருவது! நிர்வாகத்தில் அவர்கள் மேலே இருக்கிருர்கள்! நாங்கள் கீழே இருக்கிரேம்! அவ்வளவுதான்!''

"என்ன அவ்வளவுதான்! இதுவரை ஆண்டுக் கணக்கில் அவர்களை மேலே வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? ஏன் என்று கேட்டால் உங்கள் தவருன, சின்னத்தனமான, தன்னலம் நிறைந்த வெட்கங்கெட்ட அடிமைப் புத்தியை மறைப்பதற்கு நிர்வாகம் என்று கூறுகிறீர்கள்! உங்கள் நிலையில் அவர்களும், அவர்கள் நிலையில் நீங்களும், அவர்கள் பகுதியின் நிலையில் உங்கள் பகுதியும், உங்கள் பகுதியின் நிலையில் அவர்கள் பகுதியும் ஆண்டுக் கணக்கில் வேண்டாம், மாதக் கணக்கில் வேண்டாம், கிழமைக் கணக்கில் வேண்டாம்! ஒரே ஒருநாள்— ஒருநாள் மட்டும் நிர்வாகம் நடத்திக் காட்ட முடியுமா?''

"ஏன், நடத்திக்காட்ட முடியாதா? தாராளமாக முடியுமே!''

"சும்மா வாதத்திலிருந்து தப்பிக் கொள்வதற்காக வெறும் வார்த்தை சொன்னுல் போதாது அமைச்சரே! மழுப்பல் மூலம் எந்தக் காலத்திலும் உண்மையை மூடி மறைத்துவிட முடியாது அமைச்சரே! உங்கள் மனச்சான்றைத் தொட்டுக்கொண்டு கேளுங்கள்! உங்கள் நாட்டினரைப் போலஅவர்கள் எல்லாம் பொறுமை சாலிகள் அல்லர் அமைச்சரே! பொறுமைசாலிகள் அல்லர். அவர்கள் கட்டளையை நீங்கள் தலை தாழ்த்தி, அடிபணிந்து ஏற்றுக் கொள்வதுபோல, ஒரு காலத்திலும், ஒரு கணப்போதுகூட உங்கள் கட்டளையை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்! நீங்கள் கட்டளைபோட முனைந்த அந்தக் கணமே அவர்கள் உங்களை எதிர்த்துக் கிளம்புவார்கள்! உங்கள் கட்டளையைஅவர்கள் கால் தூசு ஆக்குவார்கள்!''

"அப்படியானுல் நாம் அவர்களை அடிமைப்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறீர்களா? இது மிகவும் ஆபத்தான எண்ணமாயிற்றே!''

"அமைச்சரே, கொஞ்சம் யோசனை செய்துப் பாருங்கள்,

நான் சொல்வது நன்றாகப் புரியும்! நாம் அவர்களை அடிமைப்படுத்த வேண்டுமென்று கனவிற்கூட எண்ணக்கூடாது! அப்படி எண்ணுவது மிகமிகத் தவறு! அதே சமயம் நம்மை அடிமைப்படுத்தி அவர்கள் ஆளும்படி விட்டுக்கொண்டிருக்கலாமா?''

"இதெல்லாம் வெட்டி வாதம்! யாரும் யாரையும்அடிமைப்படுத்திக் கொண்டிருக்கவில்லை! எல்லாம் ஒன்றாகத்தான் ஆட்சி நடத்திக்கொண்டு வருகிறோம்!''

"நான் சொல்வதை நீங்கள் புரிந்துகொள்ள வில்லை!''

"தெளிவாகப் புரிகிறது! நீங்கள் சொல்வது பழைய காலத்து ஏழூர் நாடு உண்டாக்க வேண்டும் என்பதுதானே! ஏழூர் நாடு என்று போனால், பிறகு ஊருருக்கும் ஒரு நாடு, தனிநாடு ஆகவேண்டியதுதான்! உலகம் எல்லாம் ஒன்றாகிக் கொண்டு வரும்போது இப்படி நீங்கள் இவ்வளவு பெரிய பிற்போக்கு வாதம் புரிகின்றீர்களே!—எவ்வளவு பேதைமை!''

"கடுமையான சொற்களைப் பயன்படுத்த வேண்டியிருப்பதற்காக வருந்துகிறேன் அமைச்சரே! இந்த ஏழூர் நாடு என்கிறீர்களே, இதை நீங்கள் சொன்னாற்கூடப் பரவாயில்லை. தங்களை உயர் கல்வி கற்றோர் என்று கூறிக்கொள்வோர், நாடு என்றால் அதன் இலக்கணம் என்ன என்று நன்றாக அறிந்திருக்க வேண்டியோர் — கேவலம் பதவிக்காக, உயர் அதிகாரத்துக்காக, நீங்கள் உண்டுவிட்டெறியும் எச்சில் இலையை நக்குவதற்காக—தாங்கள் கற்றவற்றையெல்லாம் மூடி மறைத்துவிட்டு அறிவு இழந்தவர்களாக 'ஏழூர் நாடு' வாதம் செய்கிறார்களே,அவர்கள் எல்லாம் உண்மையில் ஆறறிவு படைத்த மனிதர்கள்தாமா? அவர்கள் உடலில் ஓடுவது இந்த நாட்டுக் குருதிதானா? அல்லது சாக்கடை நீரா? சாக்கடை நீர்கூட, இந்த நாட்டுச் சாக்கடை நீர் தன்னுடைய நாட்டையும், தன் உடன் பிறந்தாரையும் மாற்றானுக்குக் காட்டிக் கொடுத்து, அடிமையாக்கி அந்த அடிமை வாழ்வே, அந்த அடிமை அதிகாரமே சுகபோக வாழ்வு, சுகபோக அதிகாரம் என்று களித்துக் கிடக்காதே!''

"எதிர்க்கருத்துள்ளவர்களை இப்படி இழித்துப் பேசுவது கூடாது!''

"எதிர்க்கருத்தை இழித்துப் பேசவில்லை. பொது நீதிக்கு முரணானவர்கள்மீது குற்றம் சாட்டுகிறேன். கற்ற உண்மையை மறப்பவர்கள் மீது குற்றம் சாட்டுகிறேன். மனச்சான்றை அடிமைப் புத்தியால் விலைக்கு விற்பவர்கள்மீது குற்றம் சாட்டுகிறேன்.''

"பாடல்வல்லான்! உங்களுக்கு அளவு மீறிய ஆர்வம் இருக்கின்றது. அந்த ஆர்வத்தில் நீங்கள் இப்படியெல்லாம் பேசுகின்றீர்கள்! ஒரு நாள் உங்கள் ஆர்வம் எல்லாம் திடீர் என்று ஓய்ந்துவிடும். அப்போது நான் சொல்கின்றபடியெல்லாம் நீங்கள் ஆடத் தொடங்குவீர்கள்!''

"யாரை, என்னைப் பார்த்தா இப்படிச் சொல்கிறீர்கள்? இதை எந்த அடிப்படையை வைத்துக்கொண்டு சொல்கிறீர்கள்?''

"உங்களைவிட அப்பனாக ஆர்வம் காட்டினவர்களையெல்லாம் என் காலடியிற்போட்டுக் கொண்டிருக்கின்றேன் தெரியுமா? அவர்கள் இப்போது என் கட்டளைக்காகக் காத்துக்கிடக்கிறார்கள் தெரியுமா? அவர்களின் செய்கையெல்லாம், பேச்செல்லாம் இப்போது என்னை ஏற்றிப் போற்றுவதாக மாறிவிட்டது தெரியுமா? அவர்கள் இப்போது உங்களைப் பாசிஸ்டுகள் என்று கூடச் சொல்லி இழித்துப் பழித்துப் பேசுகிறார்கள் தெரியுமா?''

"பாவம் அவர்கள்! இன்னும் சில நாளில் அவர்களுக்குத் — தோல்வியால், ஆற்றாமையால், வயிற்றெரிச்சலால் — வெறிபிடிக்காமலிருந்தால் அது வியப்பான செய்திதான். பித்தர்களுக்கு அறநெறி பாசிசமாகத்தான் தோன்றும்! ஆனால் அறநெறி எப்போதும் அறநெறிதான்! ஆயிரம் பேர் கூடிக்கொண்டு அறநெறியைப் பாசிசம் என்று கூறி நின்றாலும், அந்த ஆயிரம் பேர் என்ற ஈட்டப் பெருக்கத்தின் காரணமாக அறநெறி பாசிசம்ஆகிவிடாது! பார்ப்போரின் வாய்ச்சொல் காரணமாக–வாய்மையற்ற வெறும் வாய்ச்சொல் காரணமாகப், பனிக்கட்டி எந்தக் காலத்திலும் தீக்கங்காக மாறியது கிடையாது. தீக்கங்கு எந்தக் காலத்திலும் பனிக்கட்டியாக மாறுவதும் இல்லை. வெம்மை எப்போதும் வெம்மைதான். தண்மை எப்போதும் தண்மைதான். தண்மையை வெம்மை என்று பச்சைப் பொய் புகன்று தன் ஆற்றாமை வெறியைத்தீர்த்துக்கொள்வோனைத் தூக்கிவைத்துக்கொண்டு யாராவது வறட்டுவாதம் பேசிக்கொண்டு நிற்பார்களானால், அவர்கள் அறியாமையில் மூழ்கிக் கிடப்பவர்கள் என்பதற்கு ஐயமே இருக்க முடியாது.''

"என்னைப் பொறுத்தவரையில் உங்கள் கொள்கையைப் பாசிசம் என்பவர்கள் கெட்டிக்காரர்கள் என்றுதான் சொல்வேன்!''

"எப்படி?''

"உம்மைப்போல் இலட்சியம், இலட்சியம் என்று பேசிக்கொண்டு, அது கொடுக்கும் இன்னல்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு, அதை எதிர்ப்போரின் இழிமொழிகளையெல்லாம் தாங்கிக்கொண்டு, வறுமையின் சொந்தக்காரராக, இன்னல் என்பதோடு இரண்டறக் கலந்தோராகத் துன்பப்பட்டு மாய்ந்துபோக வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படாது நீங்கள் இதுவரை பட்டுப் பார்த்திருப்பீர்களே துன்பம்—அது எவ்வளவு கடுமை நிறைந்தது! பாவம், வீணே நீங்கள் ஏன் அந்தத் துன்பத்துக்கு ஆட்படவேண்டும்? உங்கள் குறிக்கோள் நல்ல குறிக்கோள் என்கிறீர்கள்! அந்த நல்ல குறிக்கோளை அடைவது சுலபமான காரியமா? இன்னும் எத்தனை எத்தனை இன்னல்களுக்கெல்லாம் நீங்கள் ஆளாகவேண்டியிருக்கும்! அப்பப்பா! அதையெல்லாம் நினைத்துப் பார்க்கவே அஞ்சவேண்டுமே! அநியாயமாக நீங்கள் ஏன் அந்தப் பேரவதிக்குள்ளாகவேண்டும்?

"அப்படியே நீங்கள் அந்த நல்ல குறிக்கோளை எய்திவிடுகின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்! அதனால் விளையும் நல்ல பலனை உங்களால் அனுபவிக்கமுடியுமா? முடியாது! ஏன் என்று கேட்கிறீர்களா? நீங்கள் அந்தக் குறிக்கோளுக்காகப் படுகின்ற பாடுகளால்,அடைகின்ற இன்னல்களால் உங்களுடைய அந்தக் குறிக்கோள் வெற்றியடைகின்ற சமயம் உங்கள் உயிர் ஒட்டி உலர்ந்துபோன — பெரும் பெரும் வேதனைகளால் நொந்துபோன உங்கள் உடலிலிருந்து பிரிந்துபோவதற்குத் துடித்துக் கொண்டு நிற்கும். பட்டென்று பிரிந்து போய்விடும். பிறகு நீங்கள் பட்ட பாட்டுக்கான பலனையெல்லாம் யார் அனுபவிப்பார்கள் தெரியுமா? இதோ இப்போது உங்கள் நல்ல குறிக்கோளைப் பாசிசம் என்று

வெறித்தனமாகப் பேசுகின்றார்களே, அவர்கள்தான்.

"நீங்கள் இலட்சிய நோக்கங் கொண்டு துன்பவாதைப்பட்டுப் போராடிக்கொண்டிருக்கும் போது உங்களை இழித்துப் பழித்துப் பேசிய வண்ணம் வெல்வெட் மெத்தையில் அமர்ந்திருக்கும் இதே ஆட்கள்தான் உங்கள் குறிக்கோள் வெற்றிபெற்ற பிறகு அதன் பலனை அனுபவிப்பதற்கு ஓடிவரப்போகிறார்கள்!

"வீணே நீங்கள் பாடுபட்டு என்ன பயன்? உங்களை இழித்துப் பழித்துப் பேசுவோர்தானே நன்மைபெறப் போகிறார்கள்!—அதுதான் சொல்கிறேன்! பேசாமல் உம்முடைய சொந்த வாழ்க்கையைப்பற்றி எண்ணிப்பாரும்; எவனோ எப்படியோ போகிறான். சமயம் கிடைக்கும் போது எதை எதை எப்படி எப்படி அடைந்துகொள்ள வேண்டுமோ, அதை அதை அப்படி அப்படி அடைந்துகொள்வதற்கு நான் வழி சொல்கிறேன். அந்த வழிக்கு வந்துவிடுங்கள்! மற்றவர்களைப்பற்றி எண்ணிக்கொண்டே காலத்தைக் கடத்திவிட்டால் உங்களைப்பற்றி நீங்கள் எப்போது எண்ணிப்பார்ப்பது?

"பேசாமல் நீர் பாடிய பாட்டையெல்லாம் மாற்றிக்கொள்ளும்! முன்னே எங்கெங்கெல்லாம்பட்டினியோடு பசியோடு அலைந்து திரிந்தீரோ, அந்தப் பக்கமெல்லாம் இனித் தலைவைத்தும் படுப்பதில்லை என்று முடிவுசெய்து கொள்ளும்! பிறகு நான் சொல்லப்போகும் புதிய செய்தியைக் கேட்டுக்கொள்ளும். அப்புறம் பாருமேன்!"

"அமைச்சரே! இதமொழி பேசி என்னைத் திசை திருப்பிவிடலாம் என்று எண்ணுகிறீரா? அது முடியாத காரியம் அமைச்சரே, முடியாத காரியம்! எவனோ ஒருவன், யாரோ இரண்டொருவர் உங்கள் இதமொழியில் மயங்கி வழிமாறிப் போய்விட்டார்கள் என்பதால் எல்லாரும் அப்படி வழிமாறி விடுவார்கள் என்று எண்ணினீரா? அந்த எண்ணம் வீண் எண்ணம்! அதை விட்டொழித்து விடுங்கள்!

"வெல்வெட் மெத்தை இருக்கைக் காரர்களைப் பற்றிச் சொன்னீர்கள்! அதுதான் வாழ்வு என்று புகழ்கின்றீர்கள்! உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள் அமைச்சரே! வாழ்வா அது? உரிமை வாழ்வு கேட்போர்கள் பாசிஸ்டுகள் என்றால், சமநலச் சமுதாயம் உண்டாகவேண்டும் என்பதற்காக உடல், பொருள், உயிர் அவ்வளவையும் இழக்கச் சித்தமாயிருப்பவர்கள் பாசிசக் கொள்கைக்காரர்கள் என்றால்! தடியாட்சியையும், சர்வாதிகார ஆட்சியையும் தவிடுபொடியாக்க வேண்டுமென்பவர்கள் பாசிசக் கொள்கைக் காரர்கள் என்றால், வாழட்டும் அமைச்சரே அந்தப் பாசிசம்! வாழட்டும்!

"ஆனால், இவற்றையெல்லாம் கூறி என்போன்றவர்களை அல்ல—நாட்டிலுள்ள பாமரரைக்கூடத் திசை திருப்பிவிட முடியாது அமைச்சரே! அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!

"அப்படியானால்?"

"உங்களுடைய எந்த ஆற்றலாலும் என் குறிக்கோளை அழித்துவிட முடியாது. வேண்டுமானால் என்னை நீங்கள் கொன்று தீர்த்துவிடுங்கள். அது உங்கள் ஆற்றலால் முடியக் கூடியது. இன்னும் எவ்வளவு சித்திரவதைகள் செய்யமுடியுமோ அவ்வளவும் செய்து நிறைவு கண்டு கொள்ளுங்கள்! அவை உங்களால் முடியக்கூடியவை!"

"உம்! அப்படியா! இரு பார்த்துக் கொள்கிறேன்!

"டேய் யாரங்கே!"

காவலர் இருவர் வருகின்றனர்!

"இவனைக் கொண்டுபோய்ச் சிறையில் அடைத்துவிடுங்கள். இவன்மீது சதிக் குற்றம் ஒன்று சோடித்துவிடுங்கள். இவனுக்கு யார் யார் வேண்டியவர்கள் என்று சொல்கின்றானோ அவர்களையெல்லாம் அந்தச் சதிக் குற்றத்திற்கு உடந்தை என்று ஆக்கிவிடுங்கள். இவனும் இவனுக்கு வேண்டிய மற்றவர்களும் அந்தக் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் வரை விடாதீர்கள்! நவீன சித்திரவதை முறைகளை நன்றாகக் கற்றுக்கொண்டு வந்திருக்கும் ஒருவனை வைத்துக்கொண்டு எல்லாரையும் எப்படி, எப்படி வதைக்க முடியுமோ அப்படி அப்படியெல்லாம் வதைத்து முடியுங்கள்!"

பாடல்வல்லான் இழுத்துச் செல்லப்பட்டான். அவனுக்கு வேண்டியவர்கள் எனப்பட்டோர் அவனுக்கு ஒத்தாசை புரிந்துகொண்டிருந்தோர் எனக் கூறப்பட்ட யார் யாரோ திடீர், திடீர் என்று சிறை பிடிக்கப் பட்டனர்.

பாடல்வல்லான் இப்போது உயிரோடு இல்லை என்று சிலர் சொல்கின்றார்கள். அவன் சித்திரவதைக் கூடத்தில் இன்னும் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டுக்கொண்டு கிடக்கிறான் என்று பேசிக்கொள்கிறார்கள் சிலர். எதையும் உறுதியாக நம்பவும் முடியவில்லை. விட்டுவிடவும் முடியவில்லை.

எல்லாரும் பாடல்வல்லானைப் பற்றி உரத்த குரலிற் பேசிக் கொள்ள அஞ்சுகிறார்கள்—கொடுங்கோன்மை அவர்களையும் சிறை பிடித்துக்கொண்டேவிடுமோ என்று.

நீதியோடு வாதிட்டுக்கொண்டு நேர்மையை எதிர்த்துக்கொண்டு கொடியவர்களால் எத்தனை நாள் பேராட்சி புரிந்துகொண்டிருக்க முடியும்?

அநீதி ஒரு நாள் அழிக்கப்பட்டுத் தானே தீரும். கொடியவர்கள் ஒரு நாள் மக்கள் மன்றில் நிற்கத்தானே போகிறார்கள்!

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

பொறுப்பாளர்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

எங்கெங்குமுள்ளாரும் கேட்கவேண்டும்; சுவைக்கவேண்டும் என்று அவன் எண்ணினான். அவ்வாறே முடிவு செய்தான்.

போர் என்னும் கொடிய நிலநடுக்கம் ஐரோப்பாவை ஆட்டிப்படைக்கத் தொடங்குவதற்குச் சில கிழமைகளே இருந்தன. அதாவது 1939-ம் ஆண்டு அப்போது ஏக் (Hague) பட்டணத்தில் வால்டர் தம் இசை நிகழ்ச்சியை நடத்தினார். பிறகு செருமனிக்கே திரும்பினார்.

வால்டரின் வருகையை அங்கே, செருமனியில் கெஸ்டபோ நிலையத்தார் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். செருமனிக்குள் நுழைந்ததும் வால்டர் கைதுசெய்யப்பட்டார். அவர் செய்த குற்றம்? ஏக் பட்டணத்தில் அவர் இசை நிகழ்ச்சி நடத்தியபோது அந்த நிகழ்ச்சிக்கு உறுதுணையாக யூதர் ஒருவர் இருந்தார். யூதன் ஒருவன் தலைமையில் இப்படி இசை நிகழ்ச்சி நடத்துவது இட்லரைப் பொறுத்தவரையில் ஒதுக்கிவிடக்கூடியதொரு சிறுகுற்றமல்ல. மிகப் பெரிய குற்றம்.

"முதலில் நான் டாச்சா என்னும் இராணுவ முகாமிற் சிறை வைக்கப்பட்டேன். அந்த டாச்சா முகாமின் பெயர் உலகெல்லாம் அடிபட்ட பெயர். ஆனால் மூன்று வாரங்களிக்குப் பிறகு அங்கிருந்து என்னை ப்ளாசன்பர்க என்னும் வேறொரு முகாமிற்கு மாற்றினார்கள். அப்பப்ப, சிறை வீடா அது! உலகக் கொடுமையின் பிறப்பிடமே அது தான். அங்குதான் அடுத்த ஐந்தாண்டுகளை நான் கழிக்கவேண்டுமென்பது நாசிகளின் உத்தரவு.

"அந்த ப்ளாசன்பர்க்கைக் கொடுமையின் பிறப்பிடமென்று சும்மா சொல்லிவிட்டால் போதாது. ஆயிரக்கணக்கான யூதர்களையும், போலாந்தியர்களையும் அங்கே வெட்டி, வெட்டிச் சிதைத்துக்கொண்டிருந்தார்கள். அழித்துக்கொண்டிருந்தார்கள். புதைத்துக்கொண்டிருந்தார்கள்.

"யார் உழைக்கும் வலுவைப் பெற்றிருந்தார்களோ, அவர்கள் தான் அங்கே உயிரோடு உலவ முடியும். அங்கிருந்த கைதிகள் எல்லாரும் பெரியதொரு வானூர்திப் பட்டறையில் வேலை வாங்கப்பட்டார்கள்—அடிமைகளினும் மிக மிகக் கேவலமான முறையில். கல்லுடைக்கும் ஓரிடத்திலும் அவ்வாறே வேலை வாங்கப்பட்டார்கள். அவர்கள் உழைத்தார்கள். உழைத்துக் கொண்டே இருந்தார்கள். மேலும் உழைக்க முடியாது என்ற நிலை வரும் எல்லைவரை அவர்கள் உழைத்துக்கொண்டிருந்தார்கள். உழைப்பாற்றலின் எல்லையைத் தாண்டியதும் அவர்கள் வீழ்ந்தார்கள்! இறந்தார்கள்! ஒழிந்தார்கள்!"

முதல் சில நாட்களிலேயே வால்டர் தம் கையை உற்றுப் பார்த்துக் கொண்டார். அந்தக் கைகள் சாமானியமானவையா! அவருடைய அரும்பொருட் களஞ்சியமே அவைதாமே! 'இனியும் இந்தக் கைகளால் 'பியானோ' வாசிக்க முடியுமா? அந்த எண்ணம் அவரை அதிர வைத்தது' என்றாலும் வால்டரின் இசையே அவரைக் காப்பாற்ற முன்வந்து நின்றது.

"அங்கிருந்த படைத்தலைவன் இசையிற் பற்றுதல் கொண்டவன்—இசைச் சுவைஞன். அந்தச் சிறை முகாமிலிருந்த இசையறி கலைஞர்களுக்கெல்லாம் அவன் ஊக்கமளிக்க முன்வந்தான். முகாமுக்குள்ளேயே இசை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு உதவினான். ஆங்கொரு இசைக் குழுவே நிறுவப்பட்டுவிட்டது" என்றார் வால்டர்.

திடீரென்று ஒரு நாள் வால்டர் அங்கே அமைத்திருந்த இசையுலகு என்னும் சிற்றுலகு பொடிப் பொடியாக்கப்பட்டது. புதிய படைத் தலைவன் ஒருவன் அங்கே வந்தான். இந்த இசைக் கலைஞன் கல்லுடைக்குமிடத்திற்குத் திரும்பவும் அனுப்பப்பட்டான்.

மீண்டும் தப்பினார்.

சுரக்கட்டை மீது படுந்து கிடந்த வால்டரின் கைகளை நான் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன். வால்டர் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். அவர் சொன்னார்:

"நல்ல வேளையாக அப்போதும் நான் காப்பாற்றப்பட்டேன். புதிய படைத் தலைவனும் ஓர் இசைச் சுவைஞன். மூன்று வாரங்களுக்குப் பிறகு கல்லுடைக்குமிடத்திலிருந்து ப்ளாசன் பர்க் முகாமிற்கே என்னைத் திருப்பியனுப்பினார்கள். அங்கே மறுபடியும் இசைக் குழு நிறுவப்பட்டது.

புதிய படைத் தலைவன் தன் குழந்தைகளுக்கு இசைப்பயிற்சியளிக்கும் பணியினை எனக்களித்தான். இந்த வேலை என் உயிரையே காப்பாற்றியது. ஒரு நாள் அந்தப் படைத் தலைவர் என்னைத் தம் அலுவலகத்துக்கு அழைத்தார். நான் சென்றேன். அங்கே அவர் மிகவும் கலக்கமும், பரபாப்பும் அடைந்திருந்தார். 'அமெரிக்கப்படை இங்கே வந்துவிடுவதற்கு முன்னதாகவே இங்குள்ள கைதிகளையெல்லாம் சுட்டுக் கொன்றுவிடவேண்டும் என்று ஒற்றர் படைத் தலைமை நிலையத்திலிருந்து செய்தி வந்திருக்கிறது' என்று சொன்னார் அவர். சொல்லிவிட்டு அவர் சும்மா இருந்துவிடவில்லை. ஒற்றர்படைச் சீருடையொன்றை என்னிடம் கொடுத்தார். மேலே என்ன செய்வது என்று நான் புரிந்துகொண்டேன்.

1945-ம் ஆண்டு ஏப்ரில் இருபதாம் நாளன்று அந்த நாசி ஒற்றர் படைச் சீருடைக்குள் என்னை நான் மறைத்துக்கொண்டு வெளியேறினேன். ப்ளாசன் பர்க்கின், அந்தக் கொடுமையின் நிலைக்களமான இராணுவ முகாமிலிருந்து, அதன் பெரிய வெளிவாயிலைக் கடந்து தப்பி வந்தேன்.

"வெளியேறித் தப்பி வந்த நான் டெகரன் சீ என்னுமிடத்தை அடைந்தேன். அங்கே மார்ட்டா பக்ஸ் என்னும் புகழ்வாய்ந்த இசைக்குழுத் தலைவியிடம் புகல் கோரினேன். அந்த அம்மையார் எனக்கு உதவியளித்தார். அங்கே எனக்குக் குளிர்காய்ச்சல் வந்துவிட்டது. மார்ட்டா அம்மையார் அமெரிக்க இராணுவ மருத்துவமனையொன்றில் என்னைக்கொண்டுபோய்ச் சேர்ப்பித்துவிட்டார்கள்.

"இசைக்கலை என் உயிரைக் காப்பாற்றிவிட்டது. திருவுளமே உனக்கு என் நன்றி" என்று நான் குழம்பிய குரலில் உதறிக்கொண்டு அப்போது கூறியது இன்னும் எனக்கு நினைவிருக்கிறது.

★

வள்ளுவர் தந்த பாரதியார்!

—[தென்னவன்]—

திருவள்ளுவர் தந்த திருக்குறட் கருத்துக்கள் காலங்கடந்தனவாய்—அறிவுலகை மிஞ்சியனவாய்—படிக்கப் படிக்கப் புதுப் புது உணர்வுகளை நல்குவனவாய்—அறிவுக் கருவூலமாய்; நீதிகளின் பிறப்பிடமாய்; உண்மைகளின் உறைவிடமாய்—நன்மைகளின் நற்பேருய்த் திகழுகின்றன.

அரசியல், சமுகவியல், வாழ்வியல்—இன்பியல் போன்ற துறைகளில் அதிற் கூறப்படாத எப்பொருளும் இல்லை. உலகத்துப் பன்மொழியும் நமதருமைக் குறளின் நலங்கண்டு—நன்மையின் சீர்மையினை உணர்ந்து — தத்தம் மொழியில் அதை ஆக்கிக்கொண்டுள்ள பெற்றியே முன் கூறிய கூற்றினைத் தெற்றென விளக்கும்.

வள்ளுவர் தோன்றித் தமிழில் குறளை யாத்த பின்னர், தமிழ் ஈன்றெடுத்த புலவர் பலரும் — வள்ளுவரின் கருத்துக்களைத் தத்தம் நூற்களில் எடுத்தாண்டுள்ளனர். இக்கூற்றினைத் தமிழ் இலக்கியம் கற்றுரோடு, தமிழுணர்ந்த ஏனையோரும் உணருவர்.

அவ்வாறு எடுத்தாண்ட புலவர்களில் ஒருவராய் நம் பாரதியும் உள்ளார். பாரதி இலக்கிய உலகினில் நுழையுமுன்னர் தமிழ்ப் பெரியோர்-வள்ளுவரின் உண்மை வடிவத்தைத் தமிழ் மக்களிடையே காட்டப் பயந்தனர். அன்று வாழ்ந்த தமிழ்ப் பெரியோர் — வள்ளுவரைத் தங்களது சமயக் கருத்துக்கேற்றவராகவே காட்டினர். வள்ளுவர் கூறிச் சென்ற புதுமைக் கருத்துக்களை—சீர்திருத்தக் கருத்துக்களை — மக்களிடம் எடுத்துக்காட்டவே இல்லை. அவர்கட்குத் துணையாக அந்தக் காலமும்—தமிழகச் சூழ்நிலையும்—ஒத்துழைத்தது. ஆம்! பகுத்தறிவுக் கொள்கை தமிழகத்தில் பரவாத காலம். சமயக் கொள்கைகளும் புராணக் கருத்துக்களும் மக்களிடையே நன்கு செல்வாக்குப் பெற்றிருந்த காலம்.

இங்கிலையில்தான் பாரதி இலக்கிய உலகில் நுழைந்தார். அவர் தனது கொள்கையை அரசியலில் செலுத்தியதால்- அடிமைத் தளையை அறுப்பதில் ஈடுபடுத்தியதால் — தனது இலக்கியத் தொண்டையும் அரசியற் கருத்துக்களை மையமாகக் கொண்டே ஆற்றினுர். தனது கவிதைகளில் அரசியற் கருத்துக்களைப் புகுத்தினுர்.

அதைக் கண்ட இந்திய விடுதலைக் கிளர்ச்சியினர் பாரதியின் கருத்துக்களை—ஆம், கவிதைகளை—மக்களிடையே பரப்பி — அவருக்கு நல்ல புகழைத் தேடித் தந்தனர். அக்காலத்தில் வெள்ளையனை எதிர்த்துப் பாடிய பாரதியின் கவிதைகள் ஒலிக்காத நாடக அரங்கமே இல்லையெனலாம்.

இங்கிலையில் அரசியலில் முக்கிய இடம் பெற்ற பாரதியார் இத்துணைக் கண்டத்து விடுதலைக்கு இடையூருக இருப்பவை — சாதிமத பேதமும், மூடப் பழக்கவழக்கங்களும்தான் என்பதை உணர்ந்து—தனது ஆற்றலைச் சமுகத்தைச் சீர்திருத்த—ஏழையை உயர்த்த அடிமைத் தனத்தை ஒழிக்கப் பயன்படுத்தினுர். சமுக சீர்திருத்தக் கருத்துக்கள் அடங்கிய கவிதைகளும் — மூடப் பழக்கவழக்கத்தை ஒழிக்கும் கருத்துக்களடங்கிய கவிதைகளும் அவரது கொந்தளித்த உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பின.

அரசியற் கருத்துக்களின் மூலம் பொதுமக்களிடையே செல்வாக்குப் பெற்ற பாரதியார், இப்பொழுது சீர்திருத்தக் கருத்துக்களடங்கிய பாடல்களின் மூலமும் செல்வாக்குப் பெற்ருர். அரசியற் கருத்துக்களைத் தந்ததில் அஞ்சாமையுடன் பாரதியார் செயலாற்றியதால்—சமுக சீர்திருத்தக் கருத்துக்கள் உள்ள அவரது பாடலுக்கும் சமுகத்தில் நல்ல வரவேற்புக் கிடைத்தது. அவர் சமயத்தைச் சாடுவதாக மக்கள் எண்ணவேயில்லை.

இங்கிலையில் தமிழகத்தில் பகுத்தறிவு இயக்கமும் ஆங்காங்கே பரவியிருந்தது. எனவே பாரதியின் சமுக சீர்திருத்தக் கருத்துக்கட்கு நல்ல மதிப்புக் கிடைத்தது. அரசியலில் அவர் பாடிய வேகத்தைவிடச் சமுகத் துறையில் அவர் பாடிய வேகம் மிகவும் போற்றற்குரியது. அது படிப்பார் நரம்பினைப் புடைத்தெழச் செய்யும் வன்மையது.

"சாதி மதங்களை பாரோம்—உயர்
சன்மம் இத்தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே"

"நெஞ்சு பொறுக்குதிலேயே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள்"

"பார்ப்பானை ஐயரென்ற காலமும்
போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும்
போச்சே.
எல்லோரும் ஒன்றெனும் காலம்
வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே"

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை
செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போ[illegible] நிந்தனை
செய்வோம்"

"விடுதலை விடுதலை விடுதலை
பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும்
விடுதலை"

என்பனபோன்ற — புரட்சிக் கனல் கக்கும் பாடல்கள் மக்களால் விரும்பிப் பாடப்பட்டன.

இத்தகைய துணிவுமிக்க கருத்துக்கள் உள்ள பாடல்களை அவர் அக்காலத்தில் துணிந்துபாடியதற்கு அவரது வீர உள்ளமும்—துணிவும் எந்த அளவு துணை செய்ததோ, அதைவிட அதிகமாக அவர் கற்றதமிழ்நூல்களும் அவருக்குத் துணை செய்தன. குறிப்பாகத் திருக்குறள் அவர் உள்ளத்தை மிகவும் கவர்ந்தநூல்என்பதனை அவரது பாடல்களின் மூலமே நன்கு அறிய முடியும். பாரதி தமிழையும் அதன் இலக்கியங்களையும் மிகவும் ஓதி உணர்ந்தவர் என்பதற்கும் அவை சான்று பகருகின்றன.

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணேம்"

என்று அவர் பாடிய வரிகளே தமிழ் மீது அவர் கொண்டிருந்த வேட்கையை விளக்கும். இதுபோல் இன்னும் அநேக எடுத்துக்காட்டுகள் காட்டலாம்.

பாரதியார் ஆங்கிலம், சமக்கிருதம், பிரெஞ்சுபோன்ற வேறு மொழி

களிலும் நல்ல பயிற்சி உடையார். எனவே, அவர் அவற்றிலும் நல்ல இலக்கியம்உள்ள தமிழைப் போற்றினார். தமிழுக்கே உயிராய் விளங்கும் குறளை ஆய்ந்து—கற்றுப் போற்றினார். அதிலுள்ள சிறந்த கருத்துக்களைத் தம் கவிகளிலும் எடுத்தாண்டார்.

திருவள்ளுவர் தம் குறளில்,

"இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

உலகைப் படைத்தவன், உலகில் சிலர் பிச்சை எடுத்துத்தான் வாழ வேண்டுமென்று அச்சிலரைப் படைத்திருந்தான் என்றால், அவனும் அப்பிச்சைக்காரர்களைப்போல் எங்கும் அலைந்து கெட்டு அழிவானாக என்று கூறியுள்ளார்.

இக் கருத்தினைப் பாரதியார்,

"தனி ஒருவனுக்கு உணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று கூறுகிறார்.

வள்ளுவர் "உலகியற்றியான்" என்பது அரசனையே குறிக்கும். கடவுளைக் குறிக்காது. எவ்வாறெனின் காலத்தையும்-சணக்கையும், இறப்பையும் — பிறப்பையும்; இளமையையும்—மூப்பையும் கடந்தவன்தான் கடவுள் என்பர் கடவுளன்பர். தோன்றுவதுதானே அழியும்! கடவுள் தோற்றம் இல்லாதவனாயிற்றே! பின் அவன் எங்கே அழிய! எனவே உலகியற்றியான் என்பது அரசனையே குறிக்கும்.

அதுபோல் பாரதியின் பாடலிலுள்ள "சகம்" (உலகம்) ஆகுபெயராய் மக்களையே உணர்த்தும். சனநாயக "மக்கள்தான் அரசு. அரசுதான் மக்கள்." எனவே சகத்தினை அழுத்திடுவோம் என்று கூறும்பொழுது அரசை அழித்திடுவோம் என்றே பொருள்படும். வள்ளுவர் காலத்தில் மன்னன் அரசாயிருந்தான். இன்று மக்கள் அரசாய் இருக்கின்றனர். பாரதியாரும் சிறந்த சனநாயகவாதியல்லவா!

எனவே வள்ளுவர் கருத்தே — பாரதியார் கருத்தாகும். வள்ளுவரை நன்கு உணர்ந்தே பாரதியார் தன் கருத்தையும் துணிந்து கூறினார். அடுத்து,

"தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலை
வின்றித்
தாழாது உஞற்று பவர்"

"தெய்வத்தால் ஒரு செயல் நடக்காவிட்டாலும் முயற்சியின் பயனால் அது முடியும்" எனவும், "சோர்வின்றி உழைத்தால் விதியையும் தோல்வியுறச் செய்யலாம்" எனவும் வள்ளுவர் கூறுகின்றார். அதையே பாரதியார்:-

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா"

"தெய்வம் நீ என்றுணர்
நாளெல்லாம் வினைசெய்
சோதிடம் தனை யிகழ்
நினைப்பது முடியும்
மிடிமையில் அழிந்திடேல்"

என்று தன் புதிய ஆத்தி சூடியில் கூறுகின்றார். இங்கு பாரதியார் வள்ளுவர் வலியுறுத்தும் ஆள்வினையுடைமையை—அதாவது முயற்சியின் பயனையே-தானும் வலியுறுத்துகின்றார். வள்ளுவர் சோதிடம் கூறும் விதியை வெல்லலாம்-முயற்சியினால் என்றார். பாரதியார், "சோதிடம் தனையிகழ் — நினைப்பது முடியும் — மிடிமையில் அழிந்திடாதே நீயே தெய்வம்" என்று மனிதனுக்கு முயற்சியை — தன்னம்பிக்கையை வலியுறுத்துகின்றார். இன்னுமொரு எடுத்துக்காட்டு:

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

—அதாவது எல்லா உயிர்கட்கும் பிறப்பு ஒரு தன்மையானதே. ஆனாலும், செய்கின்ற தொழிலால் வேறுபாடுகள் இருக்கின்றன. சிறப்பியல்புகள் (அறிவு) ஒத்திருப்பதில்லை, என வள்ளுவர் கூறுகின்றார்.

வள்ளுவர் கருத்தை எளியமுறையில் காண முற்பட்டால், சாதி மனிதரிடையே கிடையாது. இன்ன குலத்தாருக்கு இன்ன தொழில் என்பதும் இல்லை. மண்ணில் பிறந்தவர்கள் தத்தம் தொழிலால் வேறுவேறு தொழிலாளர் ஆகின்றனர். பல்வேறு தொழிலைச் செய்யும் அவர்கள் பலவகைத் தொழிலாளராக வாழுகின்றனர். இதுதான் மனிதரிடையே வேறுபாடு என்று கூறினார். இன்றல்ல — இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்.

அக் கருத்தையே பாரதியார் இன்று:

"வேத மறிந்தவன் பார்ப்பான்—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்
நீதி நிலைதவ றாமல்—தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்
பண்டங்கள் விற்பவன் செட்டி—பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி
தொண்டரென் றோர்வகுப் பில்லை—
தொழில்
சோம்பலைப் போல்இழி வில்லை
நாலு வகுப்பும்இங் கொன்றே—இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி"—என்று

தொழிலால் பிரிந்தவர் மக்கள், அவர் அனைவரும் மக்கள் குலத்தில் பிறந்த ஒரே தன்மையானவரே! சாதி மதம்—உயர்வு தாழ்வு—பார்ப்பான்-பறையன்; பிள்ளை-பள்ளன்; முதலியார்—மூப்பனார் — நாடார்—நாயக்கர்; அவர் இவர் என்று பேதம் காணாதீர். பிரிவு போற்றாதீர் என்று மிகவும் துணிந்து-ஆணித்திறமாக —அஞ்சாமல் கூறுகின்றார். தன் கவிதையின் வழி, "பிறப்பொக்கும் ......என்ற குறளைக் கூறிய வள்ளுவரைக் காட்டுகின்றார்.

எனவே இருபதாம் நூற்றாண்டின் பாரதியார் செய்த மாபெரும் புரட்சிக்குத் திருவள்ளுவப் பெருந்தகை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழகத்தில் வித்தூன்றிச் சென்றார். அதை உணர்ந்த பாரதியார் தனது புரட்சிக் கவிகளின் வழி தமிழ் மக்கட்குச் சீர்திருத்தத்தைக் கூறினார்.

பாரதி விழாக் கொண்டாடும் இந்நாளில் வறிதே பாரதியாரைப் போற்றிப் புகழ்வதோடு மட்டும் நின்றுவிட்டால் போதுமா? அவர் தந்துவிட்டுப் போன நல்ல கருத்துக்களைப் போற்றிப் பேணி அதன் வழி நடக்க வேண்டாமா? எனவே வள்ளுவரையும் பாரதியையும் போற்றும் நாம்; அவ்விரு சான்றோரின் வழிப்படி; "ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற உயர்ந்த நீதியைக் கைக்கொண்டு வாழ்ந்து—திராவிடத்தை மேம்படுத்துவோமாக!

வாழ்க வள்ளுவம்!
வளர்க பாரதியம்!!
ஓங்குக அன்பு!!!

★

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

பசியால் துடிதுடித்துக் குழந்தை விடுகிறது கண்ணீர்!

அதை அடக்க முடியாது, பாசத்தின் பிணைப்பால் தாய் விடுகிறாள் கண்ணீர்!

இருவரையும்கண்டு குடும்பத் தலைவன் விடுகிறான் கண்ணீர்!

கையும் களவுமாகச் சிக்கினோமே என்று கொள்ளைக்காரன் விடுகிறான் கண்ணீர்!

செய்த கொலை நிரூபிக்கப்பட்டு விட்டதே என்று கொலைகாரன் விடுகிறான் கண்ணீர்!

காதலிலே தோல்வி என்று காதலன் விடுகிறான் கண்ணீர்!

அத்தான் என அழைக்க அவர் கிடைக்கவில்லையே என்று அவள் விடுகிறாள் கண்ணீர்!

கைபிடித்த கணவன் தவறான வழிகளில் செல்லுகிறானே என்று மனைவி விடுகிறாள் கண்ணீர்!

பெற்ற மகனின் பெருமையைக் கண்டு அன்னை விடுகிறாள் ஆனந்தக் கண்ணீர்!

விற்ற பொருளில் வந்த இலாபத்தைக் கண்டு, வியாபாரி விடுகிறான் மகிழ்ச்சிக் கண்ணீர்!

தூவிய விதையை விளைவிக்க வானம் பொழியவில்லையே என்று விவசாயி விடுகிறான் வேதனைக் கண்ணீர்!

தான் துவக்கிய இயக்கத்தின் வளர்ச்சிகண்டு, தலைவன் விடுகிறான் இன்பக் கண்ணீர்!

துவக்கிய இயக்கம் துவண்டதே என்று வேறொருவன் விடுகிறான் வேதனைக் கண்ணீர்!

இவை அத்தனையும் கண்ணீர் தான்!

அல்லும் பகலும், வியர்வையை இரத்தமாக்கி, பாடுபடும் பாட்டாளி, வீடுவந்து சேர்ந்த உடன், பசிக் கொடுமை தாங்காது பரிதவிக்கும் தன் மக்களைக் கண்டு, இக் கொடுமை நீடிக்க, இங்கு ஓர் ஆட்சி வேண்டுமா என்று எண்ணிவிடுகிறானே, அதுவும் கண்ணீர்தான்!

ஆனால் எந்தக் கண்ணீருக்கும் இல்லாத சக்தி இந்தக்கண்ணீருக்கு மட்டும் உண்டு!

அல்லற்பட்டு ஆற்றாது அழும் கண்ணீருக்கு என்ன ஆற்றல் உண்டு?

இக்கண்ணீர் பாட்டாளிக்கே ஒழிய, பணக்காரனுக்கா?

பணக்காரன் கண்ணீர்விட்டால் பலபேர் கேட்பர்! ஏழையின் கண்ணீரை ஏன் என்று கேட்போர்யார்?

கண்ணீர்விட்டால் கண்சிவக்கும்! கண்ணீர்! அதுவும் ஒருவகை தண்ணீர்தான்!

கண்ணீர்! கண்ணீர்! எங்கும்! எல்லோரும் கண்ணீர் சிந்தினர்!

சிந்திய கண்ணீர் வீண் போகவில்லை! கண்ணீர் காலத்தால் அளக்கப்பட்டது! காலம் தீர்ப்பளித்தது!

எதையும் தாங்கும் இதயம் கொண்ட ஒருவன் அவதரித்தான்!

நம் சமுதாயம் சிந்திய கண்ணீர் போகவில்லை! திரண்டெழுவீர்! திண்தோள் வீரர்காள்! வீரமுடன் வந்திடுவீர்! வெற்றிக்கொடி நாட்டிடுவோம்!

முழங்கினான்! அடிமைப்பட்ட சமுதாயத்தின் கைவிலங்கை ஒடித்தெறிந்தான்!

கண்ணீரின் கதை

* அதியமான்

இத்தண்ணீர் பெருக்கெடுத்தால் அணைபோட முடியாது!

அணை போட்டுத் தடுத்தாலும் அங்கே அது கொந்தளிக்கும்!

கொந்தளிக்கும் இக்கடலில் சிக்கியவர் மீண்டதில்லை!

ஒருவன் துணி உடுத்துக்கொள்வான்! மற்றொருவன் சணலில் நெய்த சாக்கை ஆடையாக அணிந்து கொள்வான்!

முன்னவன் சவுக்கால் அடித்தால், பின்னவன் கண்ணீர்விடக் கூடாது! கண்களிலே தண்ணீர் வந்தால் அவனுக்கு விலை குறைவு!

முன்னவன் ஊசியால் உடலில் குத்தினால், பின்னவன் ஆ!வென்று அலறக் கூடாது! அலறினால் அவன் விலை குறைவு!

சந்தையிலே மாட்டைச் சோதிப்பதுபோல், மனிதன் மனிதனை ஓர் சந்தையிலே சோதித்து விலைக்கு வாங்கினான்!

மாட்டை மனிதன் ஏரில் பூட்டி ஓட்டுகிறான்!

ஆனால் மனிதனை மனிதன் ஏரில் கட்டி அடித்தான்!

சுருங்கக் கூறின் மனிதன், மனிதனால் மிருகத்தைப்போல் நடத்தப் பட்டான்!

யார்? எங்கே?

அவன் நாடு, ஓர் இருண்ட காடு!

அவன் உருவோ, எலும்புக் கூடு!

அவன்தான் ஆப்பிரகாம்லிங்கன்!

பணத் திமிரிலே பண்பிழந்து வாழ்ந்தவர்களைப் பதை பதைக்க வைத்தான்!

பாட்டாளி சிந்திய கண்ணீர்! பணக்காரனைச் சுட்டு வீழ்த்தியது.

பாடம் புகட்டுகிறது, அடிமை வாழ்வு ஒழிந்த கதை!

அங்கே முடிந்த கதை, இங்கே தொடங்குகிறது!

எச்சரிக்கை விடுகிறது, ஏழை விட்ட கண்ணீர்!

ஏகாதிபத்தியமே! சிந்திக்கத் தவறிவிட்டாய்!

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்! அரசவையை வீழ்த்தி விடும்!

வள்ளுவன் வழியிலே, படை புறப் படுகிறது!

ஏழையின் கண்ணீரைத் துடைத்துவிடு! இல்லையேல் அந்தக் கண்ணீர் உன் கதையை முடித்து விடும்!

○

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

END OF ISSUE